புதினப் பத்திரிகையாகப்
பதிவுசெய்யப்பெற்றது.
DUPLICATE

இந்துசாதனம்

விரோதி ஆண்டு (1889)
ஆவணி மீ ௨௪௩
ஞாயிற்றுக்கிழமை.

THE HINDU ORGAN.

குருவாரந்தோறும் பிரசுரமாகும்.

"எங்கோத்தாலு நல்லனை கேட்க வினைத்தாலு, மான்ற பேருமை தகும்."

பத்திரக் கிரயம்.

(முற்பணமாகக் கொடுக்கவேண்டியது.)
யாழ்ப்பாணப்பட்டினம்: ரூ ௧-௧௫ ரூ. ௨-௨௫.
வெளியூர், இந்தியா: ,, ரூ. ௩-௨௫.
தொலைப்பட்டணம்: ,, ரூ. ௩-௧௫
தனிப்பிரதி சதம் -௦௫.

விளம்பர விதிகள்.

		ரூ. சீ.
முதன்முறைக்கு:—	ஒருகலம்	௧-௫௦.
,,	அரைக்கலம்	௪-௦௦.
,,	காற்கலம்	௨-௫௦.
,,	ஒருநிரல்	-௫௦.

மேற்கண்டவாறு நாட்குறிப்பிடுதல்களில் அரைவாசி.

புத்தகம் - ௨௮ { யாழ்ப்பாணம்:—நள ஆறு மாசி மீ ௧௮௮ ௧ ௧ ம் ஆ மார்ச்சு மீ ௧ ௨. } இலக்கம்—௩௪.

உ

கணபதி துணை.

சீர்பூத்த கருணிறு அணாச்சி தேங்கச் சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பாரூத்த புறச்சமய விருள்க ளகலப் பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
போரூத்த சிவானந்தத் தினிது ஓங்கப் பிறைபூத்த சடைமவுலிப் பிரானார் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோது மதம்பூத்த விநாயகனருள் வணங்கி வாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ராவினம், வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக,
ஆழ்க தீயதெல் லாமர நாம்மே, சூழ்க வையக முங்குலயா தீங்கவே.

விளம்பரம்.

இலாபத்தை அடையுங்கள்.

நீங்கள் உங்களுக்கு வேண்டும் பட்டு வஸ்திரங்களைப் பிறரிடம் வாங்க உத்தேசிக்குமுன் எங்களிடம் தருவித்துப்பாருங்கள்.

திர்ப்திகரமாயில்லாவிட்டால் உடனே திருப்பியனுப்பிவிடுங்கள். உங்கள் பணம திருப்பிக்கொடுக்கப்படும.

காசியிற் பிரபல பட்டுவர்த்தகம் கே. எஸ். முத்தையா அண்டு கம்பெனி யென்னும் உலகத்திலுள்ள பெரிய வர்த்தகர்கள் உத்தியோகஸ்தர்கள் முதலிய சகலரும் நன்கு அறிவர்.

உங்கள் விலாசத்தைத் தெரிவித்தால் எங்கள் விலைபிரஜாப்தா உடனே அனுப்புவோம்.

பட்டுக் "கூறை"ப் புடைவைகள்.

ரோஸ பச்சை நீலம் வெண்காயவானம் வெளிர்பச்சை சிலேட்கலர் லையிற்புளு சுத்தரிபபூ மேகவர்ணமபோன்ற பலவித நவீனகலர்களில் உடல் சாதா பட்டு உயர்ந்த சரிகையினால் நூதனமான கரைகளும் முந்தல் முந்தாணியுமுள்ள கசு முழப் புடைவை ஒன்றுக்கு விலை ரூபா ௫0 முதல் ௬0 வரை.

மேற்படி கலர்களில் உடல் சாதா பட்டு சரிகை டேப்புக்கரையும் நகினமுந்தலையுமுள்ள கசு முழப் புடைவை ஒன்றுக்கு விலை ரூபா ௨௫ முதல் ௩0 வரை.

சரிகைக்கும் நாணயத்துக்கும் நாங்கள் உத்தரவாதம்.

K. S. MUTHIAH & CO.,
"Silk House",
BENARES CITY.

இலங்கைச் சீனிக் கம்பனி.

1917-ம் ஆண்டிற்குக் கருப்பநீர் சேர்ப்பதற்கு ஆட்கள் தேவை.

கம்பனியாரின் பனைகளிலிருந்து சேர்க்கப்படும் கருப்பநீருக்குக் கலன் ஒன்றுக்கு 6 சதவீதம் கொடுக்கப்படும.

கம்பனியார் சொல்லுகிறபடி, கருப்பநீர் சேர்ப்பவர்கள் தாம் சேர்க்கும் கருப்பநீரைச் சுத்தநிலையில் அவர்களது தொழிற்சாலையிலே அல்லது கம்பனியாரின் "டம்பிங்ஸ்டேசன்" ஒன்றிலே கொடுக்கவேண்டும்.

கருப்பநீர் சேர்க்கும் ஒவ்வொருவனுக்கும் வேறு வேறாக மரங்கள் கொடுக்கப்படும்.

கருப்பநீர்சேர்ப்பதற்கு வேண்டியகண்ணும்பு கம்பனியாராற்கொடுக்கப்படும்.

சுத்தமாயிராத கருப்பநீருக்குப் பணங் கொடுக்கப்படமாட்டாது.

ஒவ்வொன்றிலும் கருப்பநீர் சேர்ப்பவர்கள் 25 பேர் இருக்கக்கூடிய கொட்டகைகள் கம்பனியார் கட்டுவார்கள்.

நல்லாபூரூத பனைகளில் அடுத்தவருஷங்களில் நல்லாபூறும்படி, மரங்களில் கருப்பநீர் அதிகமாக ஊறினாலுஞ்சரி குறைவாக ஊறினாலுஞ்சரி கொடுக்கப்பட்ட மரங்கள் எல்லாவற்றிலும் கருப்பநீர் சேர்க்கவேண்டும்.

கருப்பநீர் சேர்ப்பவர்களின் நன்னடக்கையைக் கவனித்து அவரவர் ஏறிவந்த மரங்களையே வருஷாவருஷம் அவரவருக்குக் கொடுக்கப்படும்.

ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கருப்பநீர் சேர்ப்பவர்களுக்குச் சம்பளம் கொடுக்கப்படும்.

கருப்பநீர் சேர்ப்பவர்களுக்கு லைசென்சு பெறவேண்டியிருப்பதால், இக்கம்பனியாரால கருப்பநீர் சேர்ப்பவர்களாக வேலைகொள்ளப்பட விருப்பமுள்ளோர் தங்கள் பெயர்களை விரைவில அறிவிக்கவேண்டும்.

வெகுமதி.

கருப்பநீர் சேர்ப்பவர்களுக்கு மேலுமதிக ஆண்டுதோறுண்டாகும்படி கம்பனியார் பின்வரும் வெகுமதிகள் கொடுப்பார்கள்.

1. கருப்பநீர்காலத்தில் எல்லாரிலுமதிக கருப்பநீர் சேர்ப்பவனுக்கு 100 ரூபா வெகுமதி.
2. இரண்டாவதாயதிக கருப்பநீர் சேர்ப்பவனுக்கு 50 ரூபா வெகுமதி.
3. மூன்றாவதாயதிக கருப்பநீர் சேர்ப்பவனுக்கு 25 ரூபா வெகுமதி.

விளம்பரம்.

சாலாமிஸ்ரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைஎளியதனால் உண்டாகும் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக்கருதியே யிப்போது இந்தலேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்ரி, சுங்குமப்பூ, கிலாஜித், கஸ்தூரி, ருமாஸ்தகா, பீதானா, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸலி, பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதமபருப்பு, சாதநாவாரி, நீர்முள்ளிகிதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அபாரகபஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம், சாம்பிராணிப்பதங்கம், இன்னும் அநேக புஷ்டியான மூலிவகைகள் சேர்த்துச் செய்யயபட்டிருக்கிறது

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும பக்கவாய்வு, இருமல், காசம், பித்தகாமாளை, பித்தபாண்டு, பிளிசம், தைகால்காந்தல், வலி, இடுபபுவலி, பக்கவாய்வு, சூலைவாய்வு, இன்னும் அனேக [illegible] வியாதிகள் தீரும். எவரேனும் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லியவியாதிகள் சகமாவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள்; பால் விர்த்தியாகும்.

இந்த லேகியத்தின்விலை இருத்தல ஒன்றுக்கு ரூபா ௨0 அரைருத்தலுக்கு ரூபா ௧0. கால ருத்தலுக்கு ரூபா ௫. தபாற்செலவு பிரத்தியேகம்.

க. ஆறுமுகம்பிள்ளை,
ஆயுர்வேத வைத்தியசாலை,
இல. 96 முதல் மருதாணை,
கொழும்பு.

பவளக்கொடிச்சேலை.

மிகவும் நேர்த்தியானது!

கசு மூழம் நீளம்!! உழைக்கத்தக்கது!!!

இந்தச் சேலைகள் வெள்ளை மல்லில் சிவப்பு, கறுப்புச் சேர்த்த சாக்லேட் நிறம்போல் பவளக் கொடிகள் போட்டு, கற்றிலும் நெடுகரை கட்டியிருக்கின்றன. இது புதுமாதிரி இதுவரைகாலும் தயாரானதில்லை. இக்காலத்துக்கு மிகவும் உபயோகமானது. இதை ஒவ்வொரு ஸ்திரீகளும் தரித்துக் கொண்டு அலங்கார பூஷிதர்களாய்ச் சந்தோஷப்படுவீர்களென்று நம்புகிறோம்.

சேலை ஒன்றுக்கு விலை ரூபா ௨—௮—0

மதுரை ஜின்னடி சேலை.

இது மிகவும் உயர்ந்த மல்லில் கெட்டிதரசாயமுள்ளது. புட்டாக்கள்போட்டிருக்கின்றன.

சேலை ஒன்றுக்கு விலை ரூபா ௩—0—0.

விலாசம்:—
கனக அண்டு கம்பெனி,
பார்க்டவுன் போஸ்டு, மதராஸ்.

விளம்பரம்.

சிலிங்பலகைகள், சட்டில் கதிரை கவிச்சிமுதலிய மரச்சாமான்கள், வேண்டிய நீளங்களிற் பனைமரம், கண்ணும்பு நியாயமான விலைக்குக் கொடுக்கப்படும்.

எம். எஸ். வேலுப்பிள்ளை,
சீதாரி சாய்ப்புதெரு,
யாழ்ப்பாணம்.

விளம்பரம்.

மிகவும் கீர்த்திபெற்ற இலட்சக்கணக்கான இந்திய பிரபுக்கள் எங்கள் கேசரஞ்சித தைலத்தைப் பாவிக்கிறார்கள்.

இது மயிர் வேர்களைப் பலப்படுத்தும், மயிர் உதிராதபடி செய்யும், தலையிலுள்ள பொடுகை நீக்கும், சொறியைப்போக்கும், மயிர்வேருக்கு உணவாகும், மயிரைவளரச்செய்யும். மூளைக்குக் குளிர்ச்சியைக் கொடுக்கும், மனப்பலவீனகொடுகெகும், சுகந்தவாசனை யுள்ளது, மூளைக்குரிய வேலையில் அதிக திடனுண்டாகச்செய்யும், மயிரை வளரச்செய்யும், உன் வீட்டிலுள்ள மகளிர் கட்கு அதிகசந்தோஷத்தையுண்டாக்கும். குடும்ப உபகாரமாய்ப் பாவித்தற்கு மிகவுமேற்றது. உனக்கு வேறென்னதான் தேவை?

விலை போத்தல் ஒன்று ரூபா 1.
தபாற்கூலி அணா 5.

சுரத்பையிலுண்டாகும் வியாதிகட்கு எங்கள் ஜக்கிதாரி காஷாயம் மிகச் சிறந்த ஔஷதம். சுரத்பையைச் சீர்ப்படுத்துவதற்கு உலகத்தில் இதுவே மிகச்சிறந்த தாவர ஔஷதம். கலப்பையையும், சுரத்பையையும், குடலையும் நன்கு சுத்தம்பண்ணித் தலையிடியை நீக்கி மலசுத்தியுண்டாகச்செய்து சாலை நன்னிலைப்படுத்துகின்றது. பித்தத்தைப் போக்குகின்றது சரீரத்தில் உழைவு முதலியன உண்டாகாதபடிசெய்யும். இரத்தப் பழுதையும் அதனாலுண்டாகும்சேதங்களையும் இது நீக்கும்.

ஒரு பெட்டி குளிகைகளுள்ள ஒரு போத்தல் ரூபா 1. தபாற்கூலி 5அணா.

எங்கள் கேச கற்பம் சாவர சாக்குகளைகளால் மாத்திரம் செய்யப்பட்டது. இதில் சாயம் அல்லது நீங்குள்ள வேறுசரக்குகள் சேரவிலை. மூளைக்கு இது பலனைக் கொடுத்து மயிர் உதிராதபடி செய்கின்றது. இதைப் பாவித்தால் ஆயோதிபரும் இளந்தோற்றமுடையவர்களாவார்கள். நரைமயிரை இது கறுப்பாக்கி நல்ல பளபளப்பான தோற்றமுண்டாகச்செய்யும். சுகந்தவாசனையுள்ளது. இதன் பெறுபேறு நிலைத்தரமானது.

இரண்டு வித்தியாசமான போத்தல்கள் ரூபா 3. தபாற்கூலி அணா 9.

வியாதிகளினதும் மருந்துகளினதும் விபரங்களடங்கிய 'சுற்றறிக்கை' வேண்டியவர்களுக்கு இனாமாயனுப்பப்படும்.

வியாதிகளைப்பற்றிச் சுருக்கமாயெழுதி யறிவித்தால் மருந்தோடு அல்லது மருந்தில்லாமல் இந்தியா, பேர்மா, இலங்கை, தொலைவு யிராக்கியம் முதலியஇடங்களுக்கு "ப்ரிஸ்கிறிப்ஷன்" (Prescreption) அனுப்பப்படும்.

KAVIRAJ N. N. SEN,
GOVT. MEDICAL DIPLOMA HOLDER,
18-1 & 19, Lower Chitpur Road,
CALCUTTA.

விளம்பரம்.

முதல் தரமான ஹெங்கிஸ் கலிக்கற் றுடன் யாழ்ப்பாணம் ரேகுக்கு கிழக்குப் பக்கத்து ரோட்டில் இருக்கும் கிட்டங்கியில சகாயமான விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

இப்படிக்கு,
சி. த. செ. முதலையாபிள்ளை

தேவை.

ஓர் வங்களா கட்டுகிறதற்குத் தச்சவேலை மேசன்வேலை செய்விக்கக்கூடிய ஓர் ஒப்பந்தக்காரன் தேவை "பிளான்", பாரத்துச் செய்விக்கக்கூடியவராயிருக்கவேண்டும். விருப்பமானவர்கள் அடியிற்கண்ட விலாசத்துக்கு எழுதி அறிந்துகொள்ளலாம்.

(வங்களா)
c/o The Manager,
Hindu Organ.

ஒப்பந்தக் கேள்விக் கடுதாசிகள்

௧௯௧௫ம் வருஷம் ஐப்பசிமாதம் ௧-ந்திகதி தொடங்கி, ௧௯௨௦-ம் வருஷம் புரட்டாதிமாதம் ௩௰-ம் திகதி வரைக்கும், ஒன்று, இரண்டு, அல்லது மூன்று வருஷங்களுக்கு வத்துப்பிட்டிவலா, தொலஸ்பாகை, புசல்லாவை, தெளுத்தோ, உடப்புசல்லாவை, மடுலக்கொல்லை, மஸ்கேலியா, நாவலப்பிட்டி, கம்பளை ஆகிய இவ்விடங்களிலிருக்கும் அரசாட்சியாரின் ஆஸ்பத்திரிகளுக்குத் தேவையான சாப்பாட்டுச் சாமான்களை ஒப்பந்தமாய்க் கொடுக்கிறதற்கு ஒப்பந்தக் கேள்விக் கடுதாசிகள், ௧௯௧௫-ம் வருஷம் பங்குனிமாசம் ௯-ம் திகதி மத்தியானம் ௧௨ மணி வரைக்கும், கொழும்பு திருத்து விசாரணைச் சங்கத்தலைவரால், கொழும்பிலிருக்குமவரது கந்தோரில் பெற்றுக்கொள்ளப்படும்.

இன்னும் வேண்டிய விபரங்களை அரசாட்சியாரின் சுசற் பத்திரிகையிற்பார்த்துக்கொள்ளலாம், அல்லது பிரதான சிவில் மெடிகல் ஆபீசருக்கு எழுதி யறிந்துகொள்ளலாம்.

விலை சகாயத்திற்கும்
ஜவுளி நாணயத்திற்கும்
பேர்போனகம்பனி எது?

மதுரை மு. க.
இராமையர் அன் சன்ஸ்.

எங்கள் ஜவுளிக்கம்பனியில் சுமார் ௪௦ வருஷ காலமாக எங்கள் நேர் பார்வையின் கீழ் கைதேர்ந்த நெசவுகாரர்களைக்கொண்டு பலதேசங்களிலுமுள்ள வியாபாரிகளுக்கும் மற்றும் குடித்தனக்காரர்களுக்கும் ஏராளமான தினுசுகள் தயார் செய்து கொடுத்துக்கொண்டும், ஏராளமான தினுசுகள் கைவசம் வைத்துக்கொண்டும், விரும்பி எழுதும் தினுசுகளை யாதொரு பிசகின்றி அனுப்பியும் விசேஷ வியாபாரம் செய்து வருகிறோம் என்பது உலகம் பூரா அறிந்த விஷயம் தவிரத் தற்கால நாகரீகத்திற்குத் தக்கபடி பலவூர் அநேக நூதன தினுசுகளும் வரவழைத்து ஸ்டாக்கில் வைத்துக்கொண்டு சொற்ப லாபத்திற்கு நேரிலும், வி. பீ. யிலும் அனுப்பிக்கொண்டு வருகிறோம். அசலூர் ஆர்டர்களை உடனுக்குடன் கவனித்து வி. பீ. யில் அனுப்புவோம்.

F. M. S. பெடரேடெட் மலாய்நாடுகளில் இருப்பவர்கள் ஆர்டருடன் முற்பணம் அனுப்பவேண்டும் அல்லது பாங்க் மூலமாய் பெற்றுக்கொள்ளலாம் சிங்கப்பூர், பினாங்கு எனும் இடங்களுக்கும் வி. பீ. யில் அனுப்புவோம்.

எங்கள் ஜவுளி விபரம் விலை யாப்தா (Catalogue.) இனாமாக எழுதிப்பெற்றுக் கொள்ளலாம்.

மு. க. ராமய்யர் அன் சன்ஸ்
சுதேசி ஜவுளி வியாபாரிகள்,
மேலக் கோபுரவீதி
மதுரை.

இந்து சாதனம்

யாழ்ப்பாணம்: [illegible]

மறுபிறப்புண்மை. ௪.

நியாய ஆதாரம்.

(௧) சடமும் சித்துமாகிய இருதிறப் பிரபஞ்சத்தையும் ஆக்கி நிறுத்தி ஒடுக்குவார் ஒருகடவுள் உண்டென்பது நாமெல்லாம் பூரணமாக விசுவசிக்கும் ஒரு கொள்கை. அந்தக் கடவுள் நிர்விகாரத்துவம், தம்பயன் கருதாமை, வீண்தொழில் செய்யாமை, நீதியிற் றிறம்பாமை முதலிய இலக்கணங்களை உடையர் என்பதும் நாமெல்லாம் விசுவசிக்கும் மற்றொரு கொள்கை. இந்த இலக்கணங்களை உடைய கடவுள் சடமும் சித்துமாகிய இந்தப் பிரபஞ்சத்தை ஏன் சிருட்டிக்கிறார், ஏன் காக்கிறார், ஏன் அழிக்கிறார் என்று நாம் ஆராய்வதுண்டெனில், அவர் முன்னில்லாததொன்றைப் புதிதாகச் சிருட்டித்தார் எனல் விகாரத்துவமுடையர் எனப்படுவாராதலானும், தம்பயன் கருதிச் சிருட்டித்தாரெனில் முன் தமக்கோர் குறையுடையர் எனப்பட்டு அபூரணர் எனப்படுவாராதலானும், யாதொரு பயனும் கருதாமற் சிருட்டித்தார் என்றால் வீண்தொழிலாளர் எனப்படுவாராதலானும், பிரபஞ்சத்துட்பட்டோமாகிய எம்மை ஒழிந்த பிறபொருட்டாக எம்மைச் சிருட்டித்தார் என்றால், பிறபொருட்டாக எம்மை மேவு தன்னையுட்படுத்தினார் எனப்பட்டு நீதியிற்றிறம்புவாராதலானும், இந்த நாலுவகை ஏதுக்களுள் ஒன்றையாவது இப்பிரபஞ்ச சிருட்டிக்குக் காரணமாகக் கொள்வது கூடாது.

ஆகவே இந்தப் பிரபஞ்சம் அனைத்தையும் கடவுள் தொழிற்படுத்துவது அந்தப் பிரபஞ்சத்துட்பட்ட சித்துக்களாகிய எமபொருட்டே என்பது இனிது துணியப்படும். ஆகவே சடப்பிரபஞ்சத்தைத் தோற்றுவிக்குமுன், சித்துப்பிரபஞ்சமாகிய உயிர்கள் உள்ளன என்பதும், அந்த உயிர்களுடைய நன்மை கருதிய கடவுள் சடப்பிரபஞ்சத்தைச் சிருட்டித்து, அந்தச் சடப்பிரபஞ்சத்தின் கண்ணே சித்துப்பிரபஞ்சமாகிய ஆன்மாக்களை உய்த்துச் சடமும் சித்துமாகிய இருவகைப் பிரபஞ்சங்களையும் முதற்றொழிற்படுத்துகின்றார் என்பதும் நன்கு போதரும். அங்ஙனமன்றி இந்தச் சித்துப் பிரபஞ்சத்தையும் அந்தச் சித்துப் பொருள்களாகிய ஆன்மாக்களுடைய நன்மை கருதிப் புதிதாகச் சிருட்டித்தார் எனக் கொள்ளலாமோ எனின், கொள்ளலாமன்று. என்னை? ஆன்மாக்களை அவர்கள்பயன் கருதிச் சிருட்டித்தார் என்பது, மலடி தன் மகவுக்குப் பால் ஊட்டினாள் என்பது போலாம். முன்னில்லாத தொரு பொருளுக்கு நன்மை கருதுவது சிறிதும் கூடாது. இல்லாததொரு பொருளுக்கு நன்மை கருதுவது முயற்கோட்டுக்குப் பூணிட்டமை போலும் ஓர் ஆபாசமாம்.

ஆகவே, தனுகரண புவனங்களாகிய சடப்பிரபஞ்சத்தைக் கடவுள் எமக்குத் தருவதன் முன்னும், அத்தனுகரண புவனங்களைக் கொண்டு போகம் நுகரப் புகுதற்கும் ஆன்மாக்களாகிய நாம் உள்ளேம் என்பதும், அங்ஙனம் உள்ளேமாகிய எமபொருட்டே கடவுள் தனுகரணபுவனங்களாகிய சடப்பிரபஞ்சத்தைச்சிருட்டித்து, அந்தப் பிரபஞ்சத்தின்கண்ணே எம்மை உய்த்து, சடமும் சித்துமாகிய இருதிறப் பிரபஞ்சங்களையும் தொழிற்படுத்துகிறார் என்பதும் செவ்விதிற் பெறப்படும்.

இங்ஙனமின்றி முன்னுள்ளேமாகிய எம்மை இப்போது புதிதாகவே இப்பிரபஞ்சத்தின்கணுய்த்து இயக்குகின்றார் எனக்கொள்வதுண்டாயின், கடவுள்பால் இதனாலும் விகாரத்துவம் எய்திடும். இப்போதுதானே இந்தநினைவு கடவுளிடத்து உதிக்குமாயின், அவர்முன்னில்லாததோர் நினைவை மேற்கொண்டொழுகி விகாரத்துவமுற்று, அவ்விகாரத்துவங் காரணமாக அறிவுபாட்டுக்கும் ஆளாய்விடுவர். ஆகவே நாம் முன்னுள்ளேம் என்பது சத்தியமாயின, எம்மை முன்னும் பிறவிகளிற் படுத்து இயக்கினார் என்பதும், இனிமேலும் அங்ஙனம் செய்வார் என்பதும், இங்ஙனம் செய்யும் செயலே மறுபிறப்பு எனப்படும் என்பதும், இதனையே எமது சமயம் எடுத்துப் பிரதிபாதிப்பது என்பதும், இதுதானே விவேகிகளால் அங்கீகரிக்கத்தக்கது என்பதும், அதுபற்றியே இந்தக் கொள்கை பூர்வகாலந்தொட்டு அறிவிற்சிறந்தார் அனைவராலும் கைக்கொள்ளப்பெற்று வருகின்றதென்பதும் காண்க.

(௨) இனிக் கடவுள் ஆன்மாக்களாகிய எம்மை இந்தப் பிரபஞ்சத்தின்கணுய்த்து இயக்கு நோக்கந்தானென்னை? எம்மையெல்லாம் நித்தியானந்தப் பெருவாழ்வளித்து இரக்ஷிக்கும் பொருட்டன்றோ. இந்த நித்தியானந்தப் பெருவாழ்வுக்கும் எமக்கும் உள்ள தூரத்தை நாம் சற்றேனும் சிந்திப்பதுண்டெனில், அதனை நாம் பெறுதற்கு இன்னும் எத்தனை சன்மங்கள் வேண்டப்படுமென்பதை விவேகிகள் இனிது சொல்லத்தக்கதாகும். இந்தப் பூவுலகத்தில் உள்ள மனிதருடைய சுபாவ தருமத்தை நாம் சிந்திப்பதுண்டானால், இவர்களுள்ளே ஆயிரத்தொருகூற்றினர்தாமும் அந்த வாழ்வுக்கு உரியர் அல்லர் என்பது யாவரும் ஒத்துக்கொள்ளத்தக்கது. இந்தப் பெருந்தொகைச் சனங்களை எல்லாம் இந்த ஒரு பிறப்பாற்றானே பரீக்ஷித்துவிட்டுக் கடவுள் நித்திய நிரயத்தில் வீழ்த்தித் தண்டிப்பர் என்று நாம வாய்கூசாது சாதிக்கலாமா? ஒரு பிதாத் தன் புதல்வருக்கு ஒரு பேற்றைப் பெறுமாறு வழிகாட்டி வைத்தார் என்று வைத்துக்கொள்வோம். அவருட் பலர் ஒருமுறையிற்றானே அப்பேற்றைப் பெற்றுக்கொள்ளமாட்டார் என்றால், அவர்களுக்குப் பின்னும் பின்னும் அதனைப் பெறுதற்குரிய சலாக்கியதைக் கொடாதுவிடுவானோ? அங்ஙனம் கொடான் எனின் அவனைப்போலும்கொடியார்பிறர் இல்லையென்றன்றோ நாம் எல்லாம் கொள்ளத்தக்கது? சருவகாருண்ணிய மூர்த்தியாகிய கடவுள், எமக்கெல்லாம்பெரிதும் அதீதமாய்க் கிடக்கும் நித்தியானந்தவாழ்வைப் பெறுதற்கு எமக்கு ஒரே ஒரு முறைதான் இடங் தருவாரா? அவர் எம்மை இப்பிரபஞ்சத்தில் உய்த்து இயக்குவது எமக்கு அந்த நித்திய பேரின்பத்தைத் தருதற் பொருட்டே என்பது சத்தியமாயின், அந்தப் பேற்றை நாம பெறுந்தனையும் எம்மைப் பிரபஞ்சத்தில் உய்த்து இயக்கிக்கொண்டே வருவார் என்பது எவரும் சொல்லத்தக்கது. ஆகவே இந்த ஓரேமுறையன்றி எம்மைப் பின்னும் பலமுறைபிறவியில் கடவுள் உய்ப்பார் என்பதும், முன்னும் பல பிறவிகளில் உய்த்தார் என்பதும், நாம அந்தப் பெருவாழ்வைப் பெறுந்தனையும் பிறவிகள் தோறும் எம்மைப் புடமிட்டு அவ்வாழ்வுக்குரியர் ஆக்குவர் என்பதும், இந்த முறையைத்தானே சற்சமயமாகிய நமது சமயம் மறுபிறப்பு என்று எடுத்துப் போதிப்பதென்பதும் காண்க.

(௩) உலகநிகழ்ச்சியை நாம் உற்றுநோக்குவதுண்டாயின் எங்களுடைய எந்தச் செயலும் ஒருபயனை விளைத்தலை நாம் பரிஷ்காரமாகக் காண்கின்றோம். எங்களிடத்திலே காணப்படும் ஒவ்வொரு பயனாகிய காரியமும் எங்களுடைய செயலாகிய காரணம்பற்றியே விளைவதை நாம் பூரணமாகக் காண்கின்றோம். ஆகவே இந்தப் பிறப்பிலே எமமிடத்தே நிகழ்ச்சியுறும் ஓர் ஓர் பயனாகிய காரியத்துக்குக் காரணமாகிய யாதொரு செயலை நாம் எமமிடத்துக் காணேம் எனின், அந்தக் காரணம் இதனுக்கு முந்திய பிறப்பிற்றானே நிகழ்ந்திருத்தல் வேண்டும் என்பதும். ஆகவே இதனுக்கு முந்தின பிறப்பும் எமக்கு உண்டென்பதும் அறிவுடையார் எவரும் ஒத்துக் கொள்ளத்தக்க உண்மைகளாம். இந்த உண்மைகளை நாம் உற்றுநோக்குங்கால் மறுபிறப்புண்டென்பது பசுமரத்தாணிபோல் நாட்டப்படும்.

(௪) இனி எமது தேகத்தின் நிலைமையும் தகுதியையும் நாம் சற்றே சிந்திப்பதுண்டானால், எமக்கு இதற்கு முன்னும் பிறவிகள் உண்டென்பது நன்கு பெறப்படும். எமது இந்தத் தேகத்தின் தகுதியும் நிலையும்பற்றியன்றோ நாம் பசிதாகம், காமம், கோபம் முதலியதோஷங்களுக்கு ஆளாய் இவை காரணமாகப் பல பாவங்களைச் செய்கின்றோம். இங்ஙனமான தேகத்தைக் கடவுள் எமக்கு ஏன் தந்தார்? அவர் எமக்குச் சுத்தமானதொரு தேகத்தைத் தந்திருப்பாராயின் நாம பாவம் சிறிதும் செய்யாமல் புண்ணியத்தையே செய்து மோக்ஷத்தை இலகுவில் அடையலாமே! இந்தத் தேகத்தைக் கடவுள் தந்தமைக்குக் காரணம் நம் மேற்பிறவிகளிற் செய்த வினையே என்பதும் ஆகவே மறுபிறப்புண்டென்பது சிறந்ததொருசத்தியமாம்என்பதும் போந்தபடி காண்க.

சமாச்சாரம்.

வண்-வைத்தீஸ்வராலய மகாபிஷேகம்:—வண்ணார்பண்ணையில் சில மாசங்களாக வைசூரி நோய் பரவிவருவதால், இங்குள்ள சனங்களது திரவியங்கொண்டும், கோயில ஆதீனகர்த்தாது திரவியங்கொண்டும், மேற்படி ஆலயத்திலுள்ள சகல மூர்த்திகளுக்கும் நேற்றுத் தொடக்கம் மகா அபிடேகமும் விசேட பூசையும் நடக்கின்றன. சுக்கிரவாரமாகிய நாளைத்தினமே அபிடேகம் முடிவுறும் சைவசமயிகள் குறித்ததினங்களிற் சென்று இயன்ற அபிடேக திரவியங்களை உதவிச் சுவாமி தரிசனஞ் செய்துவருதல் நலமாகும்.

வைசூரி:—வண்ணார்பண்ணை மேற்கில் வண்ணார்பண்ணைத் தபால ஆபீசுக்குப் பிற்பக்கத்தில் ஒருவருக்கு வைசூரிநோய் புதிதாயுண்டாகி அவரை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோக அங்கே யவர் இரண்டொரு நாளில் இறந்துபோயினன். இவர் நோயுண்டாகியபின் சிறிது நாட்களாக மறைத்துவைக்கப்பட்டு வியாதி அதிகரித்த பின்னே ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப்பட்டார் போற் காணப்படுகின்றது. ஆகையால் விவரமறிந்து கூடவிருந்தவர்களைத் தக்க பாதுகாப்பின் கீழ் வைத்திருத்தல் அத்தியாவசியகமே.

சுதுமலைக்கலகவழக்கு:—சுதுமலையிலே பரம்பர் சாவீட்டில மேளமடித்தபோது கலகம் விளைந்த முப்பத்தாறு வெள்ளாளர் பொலிஸ்கோட்டில விளங்கப்பட்டு ஒருவர் ஒருநாள் மறியல்மாத்திரம் விதிக்கப்பட மற்றவர்கள் தனித்தனி ஆறுமாதமறியல் விதிக்கப்பட்டார்கள். இத்தீர்ப்புக்கு விரோதமாக இவர்கள் சுப்பிறீங்கோட்டுக்கு மனுப்பண்ணியிருந்தார்கள். ஆனால் இவர்களது மனுவை விளங்கிய நீதிபதி மெஸ். சம்பாயா அவர்கள் 8-ம் எதிரியை மாத்திரம் சுத்தவாளியாகக்கண்டு மற்றவர்களைக்குறித்துக் கீழ்க்கோட்டில் செய்யப்பட்ட தீர்ப்பைப் பெலப்படுத்தியிருக்கின்றனர்.

தேசாதிபதியவர்களின்சுகவீனம்:—தேசாதிபதி சேர் ஜோன் அண்டேர்சன் அவர்கள் திரும்பவும் சிறிது சுகவீனமடைந்து இப்போது சுகமுற்று வருகின்றனர்.

பம்பாய்த் துறைமுகத்துள் கப்பற்போக்குவரவு தடைசெய்யப்பட்டது:—பம்பாய்த்துறைமுகத்துள் பொழுது அஸ்தமனமாகி உதிக்கும் வரைக்கும் யாதொரு கப்பலும் போகக்கூடாதென்றும் கரையோரங்களில் ஓடித்திரியும் கப்பல்கள் பகலில் போகலாமென்றும், ஆனால் துறைமுகத்துள் குறிக்கப்பட்ட இடத்திலன்றி மற்றைய இடங்களில் இறக்குமதி செய்யக்கூடாதென்றும், இவ்வொழுங்குக்கு விரோதமாக நடந்தப்படும் கப்பல்கள் பிடிக்கப்படுமென்றும் துறைமுகத்துள் ஒடும் கப்பல் ஏதையாவது நிற்கும்படி கரையிலிருந்து அறிவிக்கும்போது அது நில்லாது ஓடுமாயின் அதுசுட்டு அமிழ்த்தப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

மணியகாரன் ஸ்ரீ இரத்தின மயில்வாகனம் அவர்களுக்குச் செய்யப்பட்ட உபசாரணை:—வலிகாமம் கிழக்கு மணியகாரன் ஸ்ரீ இரத்தின மயில்வாகன மவர்களுக்கு நீர்வேலிச் சைவப்பிரகாச வித்தியாசாலையிலே சென்ற சனிவாரத்தன்றிரவு ஓர்பெரும் உபசரணை செய்யப்பட்டது. ஏறக்குறையக் காலமைல் தூரத்திலிருந்து மணியகாரனவர்கள் மேளவாத்தியத்துடன் அழைக்கப்பெற்று மேற்படி வித்தியாசாலை வாயிலையடைந்தபோது மாலையிடப்பெற்று மிகவும்நன்கு அலங்கரிக்கப்பெற்றிருந்த வித்தியாசாலைமண்டபத்துட் சென் றாசனத்தமர, அவ்வேளைக்கென இயற்றப்பட்ட உபசரணைப்பாக்கள் பாடப்பட்டன. அப்பால்வித்தியாசாலைத்தலைமையுபாத்தியாயரவர்கள் ஊரவர்களுக்காக ஓருபசாரப்பத்திரம் வாசித்தனர். இவ்வுபசாரப் பத்திரத்திற்கு மணியகாரனவர்கள் தக்கவிடையளித்தபின் அவரதுஉயர்குடிப்பிறப்பைப்பற்றியும், யோக்கியதை நடுவுநிலைமை முதலிய சுகுணங்களைப்பற்றியும் உபந்நியாசங்கள் செய்யப்பட்டன.—இவ்வுபசரணை நடந்தபோது நீர்வேலியிலிருந்தும் அடுத்த குறிச்சிகளிலிருந்தும் ஏறக்குறைய 500 பேர்வரையில் சென்று சமுகமளித்திருந்தனர். உபசரணை முடிவில் சகலரும் சேர்ந்து மணியகாரனவர்களைப் பின்னரும் காலமைல் தூரத்திற்கு மேளவாத்தியத்துடன் அழைத்துச் சென்று பிரியாவிடைகூறித் திரும்பினர்.

நோத்தாரிசுமாரும் புது ஒழுங்குகளும்:—ஞாயிற்றுக்கிழமைகளும் பிரசித்தபெருநாட்களுமொழிந்த மற்றையநாட்களில் நொத்தாரிசுமூலமாக நிறைவேற்றப்படு மொவ்வொரு சாதனத்துக்கும் நாற்பத்தெட்டு மணித்தியாலங்களுக்குள் அவர் சத்தியவாசகமெழுதி அதற்கு மேற்குறித்த நோத்துகளையே வைச்சாக்கிட்டு முத்திரை குத்தவேண்டுமென்றும், 23-ம் பிரமாணம் 29-ம் பிரிவின்கீழ் வைக்கப்படும் உறுதிப்பதிவுகள் உறுதி நிறைவேறிய அடுத்தநாளுக்குப் பின் ஞாயிற்றுக்கிழமை அல்லது பிரசித்த பெருநாள் இடையில்வந்தாலொழிய ஒருபோதும் பின்போடப்படக்கூடாதென்றும், இவ்வொழுங்குகளுக்கமைய நோய் தடையாய்வரநேரின் உடனே நொத்தாரிஸ் தான் வசிக்கும் பகுதியிலுள்ள காணிப்பதிவு உத்தியோகஸ்தருக்கு அறிவிக்கவேண்டுமென்றும், அறிவிக்கும்போது தமது நோயைப்பற்றிப் பதிவுசெய்யப்பெற்ற ஓர் வைத்தியரிடமிருந்து 'சேட்டிபிக்கேற்' பெற்று அனுப்பவேண்டுமென்றும் 'கசற்'பத்திரிகையில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. அப்புக்காத்துப் பிரக்கிராசிமாராயுள்ள நொத்தாரிசுமார் இவ்வொழுங்குகளாற் கட்டுப்படுத்தப்படவில்லை.

சுப்பிறீங்கோடு:—புக்குடுதீவுக் கொலைவழக்கில் எதிரி பாராதூரமாய்க் காயப்படுத்தின குற்றத்திற்குக் குற்றவாளியாகி நாலுவருட மறியல் விதிக்கப்பட்டான். இதன்பின் பருத்தித்துறைக் கோட்டிலிருந்து பாரப்படுத்தப்பட்ட வழக்கு விளங்கப்பட்டது. இதில் எதிரி கொலைசெய்ய எத்தனித்தானெனக் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தான். எதிரி பாராதூரமாய்க்காயப்படுத்தின குற்றத்திற்குக் குற்றவாளியாகி ஆறுவருட மறியல் விதிக்கப்பட்டான். அப்பால் மட்டுவிலில் ஒருவன் ஒரு பெண்ணை விவாகஞ்செய்யும் நோக்கமாகக் களவாடிச்சென்ற வழக்கு விளங்கப்பட்டது. இவ்வழக்கில் எதிரி நிரபராதியாகி விடுதலையடைந்தான். இவ்வழக்குக்குப் பின் சுளிபுரம் கொலைவழக்கு விளங்கப்பட்டது. இதில் மார்க்கண்டன், சின்னத்தம்பி, முத்தன் என்னும் மூன்றுவண்ணார் கோவிந்தன் என்பவனைக் குத்திக்கொன்றார்களெனக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தார். ஜூரிமார் இவர்களை நிரபராதிகளென அவர்கள் விடுதலையடைந்தனர். கடைசியாய்ச் சுன்னாகம் கொலைவழக்கு விளங்கப்பட்டு எதிரிகள் இருவரில் ஒருவன் கைபிழைபாட்டுக் கொலைக்குக் குற்றவாளியாகி ஒருவருடமறியல் விதிக்கப்பட மற்றவன் விடுதலையடைந்தனன்.

மரணம்:—யாழ்ப்பாணத்திலே ஓர் பிரபல வைத்தியராக விளங்கும் டக்தர் ஆறுமுகமவர்களின் சிரேட்டபுத்திரியாகும், கே. சி. நாதனவர்களின் மனைவி சென்ற ஞாயிற்றுக்கிழமை பிரசவத்திலெழுந்த சயாசவாதநோய் காரணமாக இறந்துவிட்டனர். விவாகஞ்செய்து சிறிதுகாலத்துள் இப்பெண்மணி தன் அரிய தாய் தந்தையரையும் தமது பத்தாவையும் மற்றுமுள்ள சுற்ற மித்திரரையும் துறந்து பரலோகப்பிராத்தியானது அந்தோ! பெருந் துக்கமே.

விப்பவின் சந்திரபாலர்:—இந்திய தேசாபிமானியாகிய இவரும், திலகரைப்போல் பஞ்சாப் மாகாணத்துட் பிரவேசிக்கப்படாதென அரசாங்கத்தாரால் தடுக்கப்பட்டனர். இசதேசாபிமானிகளைக் குறிக்கப்பட்ட பிரவேசிக்கவிடின், தமகள் உபந்நியாசங்கள் வாயிலாகச் சனங்களுக்குள் இராசத் துவேஷமான எண்ணத்தை இவர் செய்வார்கள் எனடதே பஞ்சாப் அரசாங்கத்தாரின் அபிப்பிராயம்.

தந்திச் சமாச்சாரம்

யுத்தசங்கதிகள்.

(சிலோன் "அப்சேவர்" பத்திரிகையிலிருந்து மொழிபெயர்க்கப்பெற்றன.)

பிப்ரவரிமீ 15உ.

கருண்றபேர்ன்ஸ்ரொவ் என்பவரும் அவரைச் சார்ந்தவருமிருக்க விடெறிக் என்னும் கப்பல் ஜர்மனிக்கு அனுப்பும்பொருட்டு தப்பரும் துப்பாக்கிகளும் ஏற்றப்பட்டிருந்தமையைக் கண்டு றப்பர் உடனே அமரிக்கரால் பறிமுதலாக்கப்பட்ட துப்பாக்கிகள் பிரயாணிகளுடையதெனக் கண்டு அவர்கள் ஜர்மனியை அடைந்தபின்பு அவர்கள் வசம்கொடுபடவேண்டுமென்று கப்பித்தானுக்குத் தெரிவிக்கப்பட்டது.

பெல்ஜிபத்திலும் வடபிரான்சிலும் கஷ்டப்படும் சனங்களுக்கு உணவுப்பொருள் கொடுப்பதற்கு ஜர்மனியர் அமரிக்கரை விட்டிருக்கின்றனர்.

பேர்க்ஸ் துறைமுகத்திற் பின்னரும் அங்கில ஆகாயரதங்கள் வெடிகுண்டுகளைப் பெய்தன. 1 இரதத்தைக் காணவில்லை.

டொரேறனுக்கு மேற்கே பல்கேரியர் தாக்கியபோது அங்கிலர் அவர்களைப் புறங்கண்டு சிலரைக் கைதிகளாக்கினர்.

சப்மறயின்யுத்தத்தைக்குறித்து மற்றைய ராச்சியங்கள் எடுத்தமையை ஜர்மனியர் கொஞ்சமும் பொருட்படுத்தவில்லை. தரைச்சண்டையில ஜர்மனியர் அதிகம் ஜெயமடையாமையால் சப்மறயின் யுத்தத்தையே நம்பியிருக்கின்றனர்.

யுத்தத்திற் சம்பந்தப்படாதவர்களுடைய நாடுகளில் எல்லாவிலும் ஜர்மனியர் தம் ஸைநியத்தை நிறுத்தியிருத்தல் அவர்கள் சப்மறயின் யுத்தத்திற்கு மாறாகத் தம்முடன் அதிகம் பேசாதிருத்தற்பொருட்டாம். இந்த வருடத்துடன் சமாதானமாகவேண்டுமென ஜர்மனியர் கூறுகின்றனர். யுத்தத்திற்சம்பந்தப்படாத அரசகளையும் யுத்தத்திற் கழைத்துத் தம்மைப்போல் அவர்களையுங் கெடச்செய்தால் தாம் பழையபடி வியாபாரஞ் செய்யலாமென்னும் நோக்கம்ஜர்மனியருக்கிருப்பதாகக்காணப்படுகின்றது. இந்த அபிப்பிராயத்தையே அமரிக்கர்மீதும் ஜர்மனியர் கொண்டிருக்கின்றனர். சப்மறயின் யுத்தம் இப்பொழுது தான் கடுமையாய்நடக்கின்றது. ஆனல் ஜர்மனியர் காத்திருந்த அளவிற்கல்ல என்னும் கருத்தமைய அலகபாதத்திற் பிரசுரமாகும் "பையனியர்" என்னும்பத்திரிகையின்கணுள்ள தந்திச் சமாசாரங்கள் கூறுகின்றன.

பிப்ரவரிமீ 16உ.

மகிறேடல்கைதிகளை விடுதலைசெய்யவேண்டுமென்றும், அமரிக்காவிலுள்ள ஜர்மனிய கப்பற்காரரை நடத்தும் விதத்தைக் குறித்தும் இன்று அமரிக்கர் ஜாமனியருக்கு ஓர் நிருபம் விடுப்பர்.

பத்லோலோவுக்குக் கிழக்கே 1050 ம் குன்றில் இத்தலியர் ஜர்மனியரைத் தாக்கித் தாம் முன்னர்ப்பறிகொடுத்த அகழ்கள்முழுவதையும் பிடித்தனர். பகைவர் தாக்கியபோது அதிக சேதத்துடன் துரத்தப்பட்டனர்.

கெய்சர் தமது கடற்படைக்குச் சொல்லியது:—எங்கள் பகைவராகிய ஆங்கிலர் எங்களைப் பட்டினிபோடும் நோக்கமாக மற்றத் தேசங்களிலிருந்து கப்பல் மூலமாய் எங்கட்கு உணவுப்பொருட்கள் வாராதபடியும், எங்கள் கப்பல்கள் மற்றுமிடங்கட்குப் போகாதபடியும் தடுக்க முயன்றிருக்கின்றனர். எங்கள் சப்மறயின கப்பல்கள் அவர்களுடைய எண்ணத்தைப் பிரதிகூலமாக்குதற்கு முன்வந்திருக்கின்றன.

கிரேக்கதேசத்திலுள்ள நேசவர்களெல்லாரும் தங்கள் வசமுள்ள ஆயுதங்களை ஒப்பித்துப்போடல் வேண்டுமென்றும் அங்ஙனம் தவறின் அவை பறிக்கப்படுமென்றும்,ஒப்பிக்கமறுக்கவர்களுக்கு அபராதம் விதிக்கப்படுமென்றும் கிரேக்க அரசாங்கத்தார் பிரமாணஞ் செய்திருக்கின்றனர்.

கெய்சர் முடிவரெண்ணும் புலவருடன் சம்பாஷித்தபோது கடற்போக்குவரவைத்தடுத்த ஆங்கிலருக்கு வசதியீனஞ் செய்யவேண்டுமென்று நெப்போலியன் பொனப்பாட் கொண்ட எண்ணம் அப்பொழுது பலிக்காவிட்டாலும் இப்பொழுது பலித்ததென்றும், நீதியும் சன்மார்க்கமும் ஜர்மனியர்பாலதே என்றும், அவற்றைப் பெறுதற்கு ஜர்மனியருடைய ஒவ்வொரு பரிசுத்தமான ஆயுதமும் உபயோகிக்கப்படுமென்றும் கூறினர்.

சிவிஷியா, வெர்க்கா, மார்க்கெறெற்று என்னும் ஆங்கில கப்பல்களும், வேறு 3 ஆங்கில சிறியகப்பல்களும் கடலுள் அமிழ்த்தப்பட்டன.

பிப்ரவரிமீ 17உ.

அன்கரில் ஆங்கிலர் செயமடைந்தனர். தெற்குப்பக்கமாக 1½ மைல் தூரத்தைப் பிடித்தனர். பிராமொன்று கிராமங்களுக்கு எதிர்ப்புறத்தில் 1000 யார் முற்பட்டுச் சென்றனர். பகைவர் எதிர்த்தபோது துரத்தினர். அவர்களுக்கு இதில் அதிக சேதமுண்டு பகைவருள் 268 பேர் கைதிகளாக்கப்பட்டனர். அவர்களுள் 6 பேர் இராணுவ உத்தியோகஸ்தர்கள். கியூவ்சாப்பெல் என்னுமிடத்திற்குத் தெற்கிலும், புளெக் தெருவுக்குத் தெற்கிலும் பகைவர்மீது ஆங்கிலர் கடும் குண்டுப்பிரயோகஞ் செய்தனர். பலர் கொல்லப்பட்டனர் பல அகழ்கள் அழிக்கப்பட்டன. லெண்சிற்கு மேற்கிலும், ஜிவெஞ்சிக்குத் தெற்கிலும் பகைவர் சருவியபோது துரத்தப்பட்டனர்.

அதில் ஜர்மனியர் பின்னடையராதருக்கப்பட்டனர்.

பகைவர் இத்தாலியருக்குரிய ஹிரஸ்ரோலன் னுமிடத்திற்கு மேற்கிலுள்ளபகுதிகளையும்,புசோலெப்பாசைக்கு வடகிழக்கிலுள்ள பகுதிகளையும் தாக்குகின்றனர்.

அவ்றொன், கிறின்லண்டு, தோரபூர், கியனபிர், லாரன்ஸ்ரார், என்னும் கப்பல்களும், வேறும் 4 ஆங்கில கப்பல்களும் கடலுள் அமிழ்த்தப்பட்டன.

பிப்ரவரிமீ 18உ.

அன்கரிற் கடும் யுத்தம் ஆங்கிலருக்கும் ஜர்மனியருக்குமிடையே நிகழ்கின்றது. 774 பேர் கைதிகளாக்கப்பட்டனர். யப்பிறிறிற்கு வடக்கே 119 பேர் கைதிகளாக்கப்பட்டனர். யப்பிறிசிற்குத் தெற்கே தாக்கியபோது பகைவர் ஆங்கிலரால் துரத்தப்பட்டனர்.

பிபிக்கோட்டென்னுமிடத்தில் இடையிடையே குண்டுப்பிரயோகம் நடப்பதாக ஓர் பிரான்சிய சமாசாரத்தால் அறியக்கிடக்கின்றது.

ஜர்மனியர் டிவினிஸ்க் நதிக்குத் தெற்கே தாக்கியபோது ரூசியரால் துரத்தப்பட்டனர்.

முன்னரைக்காட்டிலும் இனிமேல் யுத்தம் கடுமையாய்நடக்குமென்றும், ஆதலால் அங்கிலர் இன்னும் அதிக சனங்களை இரை கொடுத்தாற் செயமடையலாமென்றும், ஜர்மனியர் பக்கலில் அதிகம் வலிமை இன்னுமுண்டென்றும், வெற்றியின் பொருட்டு ஜர்மனி பகீரதப் பிரயத்தனம் செய்யுமென்றும், இனி வரப்போகும் மாசங்களே தருணமான காலமென்றும், ஈற்றில் ஐக்கியசாதியார்க்கே ஜெயமுண்டாகுமென்றும் ஆனல் அதுவும் இலகுவில்லவென்றும் லாரட் டோபி என்பவர் பொல்தறன் என்னுமிடத்திற் கூறியிருக்கின்றனர்.

பிப்ரவரிமீ 19உ.

மியூஸ் நதியின் இருமருங்கிலும் கடும் குண்டுப் பிரயோகம் நடந்ததாக ஓர் பிரான்சிய சமாசாரம் வருகின்றது.

உஆஸ்றர் வைதபார் என்னும் கப்பல் கடலுள் அமிழ்த்தப்பட்டது. வேறும், லாடி அன் மேறி லீயோன் ஹாட், மறியோன் டோசன், குவின்ஸ் ஜூ', ரேமிக்ஸ் டேவின், வல்டென் என்னும் ஆங்கிலகப்பல்களும், வேறும் இருசிறிய ஆங்கில கப்பல்களும் கடலுள் அமிழ்த்தப்பட்டன. அமிழ்த்தப்பட்ட இக்கப்பல்களிலிருந்தோர் பலர் கொல்லப்பட்டனர். பலரைக் காணவில்லை.

மிருமொன் றென்னிடத்திற் கடும் யுத்தம் நடந்தது. இதில் அங்கிலருக்கு அதிக செயமுண்டு. பகைவருட் பலர்மாண்டனர். பலர் கைதிகளாக்கப்பட்டனர்.

பகைவருக்குரிய ஓர் செப்பிளின் கப்பல் டோவர்சலசந்தியிலிருந்து போலோக் வரையிற் சென்று சில குண்டுகளைப் பெய்தும் யாதும் பயன்படவில்லை.

பிப்ரவரிமீ 20உ.

சௌச்சசக்குத்தெற்கே ஆங்கிலர் பகைவர்மீது குண்டுப் பிரயோகஞ்செய்தனர். அகழ்களையும் அழித்தனர்.

அவுரேக்கோட், பெப்பர்ஹில், பெசொன் வோக்ஸ் என்னுமிடங்களிற் கடும் யுத்தம் நடக்கின்றது. டாம்லோப்பிற்கு வடக்கே பகைவருடைய ஒழுங்குகளைப் பிரான்சியர் அழித்தனர்.

ஜர்மனியர் வைத்திருக்கும் பொன்னுபரணங்கள் அனைத்தையும் அரசினரிடம் யுத்தத்தின் பொருட்டுக் கொடுத்துவிடல்வேண்டுமென ஓர் பிரமாணம் ஜெர்மனியிலேற்பட்டிருக்கின்றதாம்.

ஆங்கிலர் சின்னைக் குடாநாட்டில் துருக்கியருக்குரிய செய்க்ல், பீறல்கசான, என்னுமிடங்களிலுள்ள முக்கிய ஸ்தானங்களையும், பலகைதிகளையும், கொள்ளைப்பொருட்களையும் அகப்படுத்தினர்.

ஐயூலோ, ஒக்ஸ்மென்று என்னும் இரு ஆங்கில கப்பல்களும், வேறுமிரு சிறிய அங்கில கப்பல்களும் கடலுள் அமிழ்த்தப்பட்டன.

அமிரோப்பாவிலே பெண்களும் பிள்ளைகளும் எங்காவது பிரயாணஞ் செய்யவொண்ணுதென தடுத்திருக்கின்றனர்.

பிப்ரவரிமீ 21உ.

வால்பறிசோவிலிருந்து சுவீடினுக்கு வெடியுப்பேற்றிவந்த குக்கோகமிலற்ற என்னும் தங்கள் கப்பலை ஜர்மனியர் பிரமாணநிறந்து மாருக்க கடலுள் அமிழ்க்கிவிட்டனரென சுவீடின் அரசினர் குறைகூறுகின்றனர்.

ஆங்கிலர் துடிக்கோட்டுக்கு வடகிழக்கே சில அகழ்களைப் பிடித்தனர். ஆமன்ரையவதிற்குத் தெற்கே பகைவருக்குரிய அகழ்களுள் 650 யார் தூரத்திற்கு உட்பிரவேசித்து அவர்களில் அநேகரைக் கொன்றனர். யப்பிறிசிற்குத் தென்கிழக்கே பகைவரைத் தாக்கிப் பலரைக் கொன்று அகழ்களையும் அழித்தனர். அன்று சிறைப்படுத்தப்பட்ட பகைவர்தொகை 184. ஆங்கிலர்பக்கத்திலும் சிறிது சேதமுண்டு.

கியூவவுண்லன்டு, நப்போலா என்னும் ஓர் மீன்பிடிக்கும் சிறு கப்பலுங்கான் சேற்று அமிழ்த்தப்பட்டன. (இவை ஆங்கிலருக்குரியன).

ஆங்கிலதேச படங்களையும், பிரதிமைப்படங்களையும், இராணுவத்திற்குரிய சில விஷயங்களையும்நபசரிக்க முயன்ற 2ஜர்மனியஒற்றர்கள நியூயோர்க்கிற் பிடிக்கப்பட்டனர். இவர்களுடன சம்பந்தப்பட்டவர் 15பேராம். இவர்கள் பத்திரிகைகாரர் என்னும் மாறுவேடத்துடன் இங்கிலாந்திற்குச் சென்றவர்களாம்.

பினிமவுத் என்னும் ஆங்கில துறைமுகத்தில் யுத்தத்திற் சம்பந்தப்படாத சாதியாரின் கப்பல்களும் செல்லவொண்ணுதெனத் தடுத்திருக்கின்றனர்.

பிப்ரவரிமீ 22உ.

வெர்மலிசிற்குக் கிழக்கிலும், கியூவ்சாப்பலுக்குத் தெற்கிலும் பகைவர் சருவியபோது ஆங்கிலரால் துரத்தப்பட்டனர். பகைவருட் சிலர் மாண்டனர்; சிலர் கைதிகளாக்கப்பட்டனர்.

புற்-டி-மெஸ்னில் என்னுமிடத்திலும், மியூஸ் நதிதீரத்திலுள்ளகொறியேஸ்ஆ டி லும்,பெசன்லோக்ஸ் என்னுமிடத்திலும் இடைவிடாத குண்டுப்பிரயோகம் நடந்தது.

டொர்னவாற்றிஎன்னுமிடத்தில் இடையிடையே குண்டுப்பிரயோகம் நிகழ்வதாக ஓர் ரூமேனிய சமாசாரத்தாற் புலப்படுகின்றது ரூசியருக்குரிய வொஸ்கேனி என்னுமிடத்தைப் பகைவர் கடுமையாகத் தாக்கியதால் ரூசியர் சிதறுண்டனர். மேற்குமொல்டேவியாவிலும் கொடூரமான குண்டுப்பிரயோகம் நிகழ்கின்றது ரூசியர் மற்றுமிடங்களிற் கடுங் குண்டுப் பிரயோகஞ் செய்து பகைவரைப் புறங்கண்டு அவர்கட்குரிய பல ஸ்தானங்களை அழித்தனர்.

பிடீஜ் என்னும் ஓர் சிறிய ஆங்கில கப்பலும் வேறோர் ஆங்கிலகப்பலும் கடலுள் அமிழ்த்தப்பட்டன.

ஜர்மனிய கப்பல்கள் அமரிக்காவில் நடைபணணப்படமாட்டாவென்றும், அவற்றிலுள்ள கப்பித்தான் முதலிய உத்தியோகஸ்தர்கள் சிறைப்படுத்தப்படமாட்டார்களென்றும் அமரிக்க தேசாதிபதியத்தார் வாக்களித்தபின்பு, ஜர்மனியர் யரோடேல் என்னும் கப்பலிலிருந்த அமரிக்கரை விடுதலை செய்தனர்.

கடிதம்.

வருணச்சிரம தருமம்.

பூர்வத்திற் பஞ்சபாண்டவர் வனவாசஞ்செய்த காலத்தில் ஒருநாள் வீமன் ஓர் தடாகத்தை நோக்கிச்சென்றான். அங்ஙனஞ்செல்லும்போது ஒரு பெரிய பாம்பு சீறியெழுந்து அவ்வீமன் சரீரத்தைச் சுற்றிக்கொண்டது வீமன் அப்பாம்பை விலக்கத் தன்னுலானமட்டும் முயன்றும் இயலாமை கண்டு அற்புதமும் அச்சமுமடைந்து "இது சாமானியமான பாம்பன்று, யாரோ சாபத்தினுல் இப்படி மாசுணமாய் மாறியிருத்தல் வேண்டுமென உணர்ந்து அந்த அரவத்தை நோக்கி,

"அரக்கரோ?மாய அசுரரோ? இயக்கரதிபரோ? ஆர்கொல் நீ? அன்றேல், இரக்கமேங்கிய வெம்பணிக் கிறைதரோ? என்னை யேன் பிணித்தனை? விடுவாய், வரத்துயர் வாயுதக்கவன்; இந்துமரபிடையுதிட்டிரற்கிளைய,காக்கதயானை அயுதமெய்வலிசேர் சதாயுத வீமன்யான்"

"எவ்வலியுடையோர்க் காயினு மிளையேன்; இனித்தனன் உன்வலி தனக்கு என் மெய்வலி எங்ஙன் ஒளித்ததோ உணரேன்; விதிவழி இது வெனத் தெளிந்தேன்; பொய்வலி தானே? விஞ்சையோ? வரமோ? புகலுதி உள்ளவாறு" என்றான்.

வீமன் இங்ஙனம் பலவாறு வினவி இரந்து நிற்பவும் மாசுணம் தன்னை விடாமை கண்டு "இன்றே நமக்கு இறதிநாளாகு"மென ஏங்கி நின்றான்.

தடாகத்தை நோக்கிச் சென்ற தமது தம்பி மீண்டு வாராமையைக் கண்ட தருமபுத்திரர் அவனைத் தேடிச் சென்றவிடத்தில் அவன் அரவத்தாற் பிணிப்புண்டிருத்தலைக்கண்டு திடுக்குற்றுப் பின் அற்புதவயத்தராய், தமது இளவலைப் பிணித்த இது உண்மையான அரவமன்றென்று உணர்ந்து அதனைச் சமீபித்து "சர்ப்பராசனே,

"அருந்தவ மியற்றிப் பெற்றபாவகளை அரும்பசிக்காய் அருந்தலரோ!, இருந்த இத்தலத்தில் வேண்டிய விலங்குடன் இக்கணந்தனில் இவன், வருந்த மிக்கு இவனை விடுதி அல்லாமலும் உனது வரலாற்றையும் எனக்குச் சொல்லவேண்டு"மென்று இரந்தனின்றார்.

அறத்தனிமைந்தன் அறைந்த வார்த்தையைக் கேட்ட அரவம் அவரை நோக்கி "வாராய் தருமபுத்திரனே, யான் இப்பொழுது தோற்றுகிறபடி உண்மையில் ஓர் பாம்பல்ல. யானும் உன் குலத்தவன்; என்னை நகுடன் என்று சொல்வார்கள்; பல கலைகளும்பயின்று பாரெலாம் ஒரு குடைக்கீழ்ப் பரிபாலித்துவரும்நாளில் இந்திரபதவியை விரும்பிச் சதமகஞ் செய்தபின்னர் அப்பதவியை எய்தஞ் சமையத்தில் ஓர் சூழ்ச்சி காரணமாகக் குறுமுனியிடு கொடுமொழியால் இப்படவரவாகி இக்கானகத்தில் எதிர்ப்பட்ட விலக்குகளனைத்தையும் வரைவின்றி உண்டுழல்வதாயினேன். குறுமுனிவன் கூறியவண்ணம் உன் கனிஷ்டனைப் பற்றித்து, என் மனத்தில் நிகழும் சிலஆசங்கைகட்குத் தக்க சமாதானம் யாரேனும் சொல்லப் பெறுவேனுயின் அன்றே என் சாபம் விமோசனமாகும்; அந்த ஆசங்கைகளை நிவிர்த்தி செய்ய வல்லவன் நீயேயாதலின் நீ சுண்டுவருங்காறும் இவனைப் பற்றித்துக்கொண்டிருந்தேன்" என்றது.

தருமபுத்திரர் சொல்லொணு ஆச்சரியமுற்றவராய் "ஐயனே, உமதுஉள்ளத்திலுள்ள சந்தேகங்களைக் கூறினல் என் சிற்றறிவிற்குப் புலப்பட்டவரையில் விடைபகர்வேன்; கூறுதிர்" என்றார். அரவம் அறத்தனிமைந்தனைநோக்கி "நிலந்தனில் என்ன குணமுளோன் மறையோன்? நிலைத்து அவன் கைக்கொளும் பொருள் எது? உலகருதோளாய் உணர்த்தி நீ என்ன, உதிட்டிரன் "சரதம், நல்லொழுக்கம், வலந்தருபொறுமை, தவம் அழாக்குணத்தோன் மறையவன், இன்பதுன்பங்கள், நலம்பெறும்மோகம், உலோபம் நீத்திருத்தல் நற்பொருள் அவன்றனக்கு"என்றான். மேலும் தருமர் பாம்பைநோக்கி "மேற்சொன்ன ஒழுக்கங்கள் அற்றவன் பிராமணனயினும் அவன் சூத்திரனுக்குச் சமமாவன்" என்று கூறினர்.

அப்பொழுது பாம்பு தருமரைப்பார்த்து "சூத்திரன் மேற்கூறிய ஒழுக்கமனைத்தும் அமையப்பெறின் அவன் பிராமணனுவனே" என்ன, தருமர் "அப்படியன்று, மனுவினல் வகுக்கப்பட்ட குறித்த ஒழுக்கங்களைச் சூத்திரன் அனுஷ்டித்து வருவானுயின் அவன் சற்சூத்திரனுவான்; மேலும், தன் ஒழுக்கத்தினின்றுந் திறம்பிய பிராமணனைச் சூத்திரனுக்குச் சமமெனக் கூறலாமேயன்றி, ஒழுக்கத்தில் மேம்பட்ட சூத்திரனை ஒருபோதும் பிராமணன் எனச் சொல்லவொண்ணு" தென்றார். இதற்கிற்குப் பிரமாணம்:

(நல்லாப்பிள்ளைபாரதம், ஆரணியபருவம், அருச்சனன் பூலோகத்திற்குவந்தசருக்கம்; செய்யுட்கள் 60, 61.)

"வருணசன் கரமாய்ச் சராசர மனைத்து மியக்கிய விடைதனில் விளக்கும், அருணகன் மரபின் மனுவெனும் வேந்த னுதித்தால் லருமறை வழியே, பொருணனி தெரித்து மனுநெறி பசனித்துப் புகன்றன தொழுகலாற் சாதந், கருணைசுத் தநமஞ் சூத்திர னிடத்திற் காணிற் சுந்சூத்திரனெனவே"

"மறையவர் குலத்தி லருமறை நெறியை மறுவிடுனன் சூத்திர னன்றிப். போறைமழுந லொழுக்க முள்ளநற் தீரனைப் புகல்வரோ மறையவனெனவே, அறநிகரு காலத தந்தரைநிறையாதிமாலவெனு மருண முறை தவிர், குறையுறஞ் சற்சூத்திரனென வெவருங் குறிப்பிடுவரென் றனைத்தலர் சோமான்" என வருவனவற்றுற் காண்க.

பின்னரும் நகுடன் வினவிய சில சந்தேகங்கட்குத் தருமர் தக்கவிடை பகர்ந்தலும், அவன் தனதுசாபம் விமோசனமாகப்பெற்றுத் தொல்லுருவடைந்து விண்ணுலகெய்தினனென்க.

கலாவினுதன்.

கம்பரும் மகனும்.

(தொடர்ச்சி)

மேற்குறித்த வேளாளன் உழுது கொண்டு போம்போது பணப்புசையல் ஒன்று தப்பிட்டது அதில் அரைவாசியை வெகுமென்று கம்பரைக் கேட்க, அவர் தடுத்து அன்றுன்கு முழத்தில் இரண்டு சிலை மாத்திரம் தாதாத போதுமெனப் பெற்றுக்கொண்டு இன்னெரு கிராமஞ்சேர்ந்து அங்கே செல்வன் என்னும் ஓர் வேளாளன் வீட்டையடைந்து அன்னங் கேட்க அவ்வேளாளனின் மனைவி தான் சமைத்த கம்பஞ் சோற்றைக் கொடுக்க வெட்கமடைந்து அடுத்த வீடுகளுக்குப் போய் நெல்லுச்சோறு கேட்டாள். அங்கு கிடையாததினுல் வீடுவந்து கம்பஞ்சோற்றையே கம்பருக்குப் படைக்க அவ்வீட்டுக்காரியின் நற்குணத்தைக் கவனித்த கம்பர் கம்பஞ் சோற்றை விதந்தும் நெல்லுச்சோற்றை யிகழ்ந்தும்

"செல்லன்காடு தனில்விளையா கடியகிலத்திற் ருன்முளையா, அல்லகிருந்த கருங்கூந்தல் அணைக்குக்கணக்கு போலாவாள், செல்லன்றேவி மனைகடொறுந் தேடித்திரிந்துங் காணுக, செல்லஞ்சோறே கம்பஞ்சோற்றினை நீசமர்ந்து திரிவாயே"

என்னும் இப்பாட்டைவிகடமாகப்பாடினர்.

சோழனுக்குக்கம்பராமாயணத்தின்பேரிலிருந்த பிரியத்தினுல் தன் சபையிலிருந்த வித்துவான்களைக்கொண்டு இராமாயணப் பிரசங்கம் நடப்பித்தான். இப்படி நடந்துவருங்காலத்தில் ஓர்தினம் பாலகாண்டத்தில் வேள்விப்படலத்தில்

"எண்ணுதற்காக்கரிதிரண்டுமூன்றுநாள்
விண்ணவர்க்காக்கியமுனிவன்வேள்வியை
மண்ணினைக்காக்கின்றமன்னர்மைந்தர்கள்
கண்ணினைக்காக்கின்றவிமையிர்காத்தனர்"

என்னும்பாடலையும், மிதிலைக்காட்சிப்படலத்தில்

"உமையாளொக்கும் மங்கையருக்கு கரம் வைக்கும், உமையாண் மேனி கண்டவர் காட்சிக்கரைகாணு, இமையா நாட்டம் பெற்றில மென்று திருகண்ணுன், அமையா தென்று ரந்தர வானந் தவரெல்லாம்"

என்னும் பாடலையும் இசையுடன் பாடி அர்த்தஞ் சொல்லுவதைக்கேட்ட அரசனுஞ் சபையோரும் சந்தோஷப்பட, கம்பரோ சந்தோஷக்குறிகாண்பியாமலிருக்க, அரசன் அதைக்கண்டு முகாந்தரமென்னென் றவினவ, கம்பரோ "மகாராசாவே, இந்தப் பிரசங்கம் இறந்த கர்த்தாவாகிய கம்பர் கருத்துக்கு இசைந்திருக்கவில்லை"யென,சோழன் "கம்பர் கருத்து உனக்கெப்படித் தெரியும்" என்ன, "நான் கம்பருக்கு அடைப்பக்காரனுயிருந்தேன்" என்றார். அரசன், "நீ பிரசங்கிக்க மாட்டுவையோ" என்ன "கூடியமாத்திரம் பிரசங்கிப்பே" னென்ன, அப்படியாகுற் பிரசங்கியென்று உத்தரவு அளிக்க, கம்பர் "சர்க்கரைப் பந்தரிற் றேன்மாரி பொழிந்த" பான்மையாய் நவரச அலங்காரத்துடன் பிரசங்கித்தார். அது கேட்டு அரசன் அதிக சந்தோஷமாகி அன்று முதற் கம்பரைச்சிநேகித்து, தன்னுடனே கூடச் சமபந்தியாயிருந்து போசனப்பண்ணும்படி மற்ற வித்துவான்களிலும் அவரைப் பதின்மடங்கு மேன்மையாய் வைத்திருந்தான். இதைக் கண்ட புலவோர்

"அழுக்காறென வொருபாவி திருச்செற்றுத்
தீயுழி யுய்த்து விடும்"

என்பதற்கிணங்க, கம்பரிற் பொறாமை புடையராகி, அரசனுக்குச் சவரஞ்செய்யும் அம்பட்டனுக்கு இலஞ்சங் கொடுத்து, கம்பரை உனது மூத்த தமையனெனக் கொண்டாடுமெனப் பணித்தனர் அவனே தான் வாங்கிய இலஞ்சத்தின் பேறாய்க் கம்பர் இராசசபையேறுஞ் சமையத்தில், "அண்ணு நீ எனைப் பிரிந்துபோய் எவ்வளவு காலமாயிற்று இவ்வளவுகாலம் எவ்விடஞ் சென்றிருந்தாய். வீட்டிற்குப் போவோம் வா" வென்று கூப்பிட, அப்படியே அவர் அம்பட்டனேடு அவன் வீட்டுக்குப் போய் இராசமுகம் வந்து, சரஸ்வதியை நினைக்க ஓர் அழகிய பாதசிலம்பு அவர் கைக்கு வந்தது. உடனே இவனிடம் இதைப்போலொத்த இதன் சோடியான சிலம்பு இருக்கிறது என்று சொல்லி, தன்னிடமிருந்த ஒற்றைச் சிலம்பை அரசனுக்குக் கையளித்து, மற்றைச் சிலம்பை அவனிடம் வாங்கி இராணிக்கு இடுங்கள். இச்சச் சிலம்புகள் இரண்டும் எங்கள் மூதாதையுடையது என்று சொன்னர், இராணி சிலம்பை வாங்கிப்பார்த்து அதன் காந்தியாலும் அழகாலும் மயங்கி, மற்றதையும் வாங்கித்தரும்படி அரசனைப் பலவந்திக்க,

"இருதலைக் கொள்ளி யுற்ற வெறும்பென வேகுமார்க்கம், ஒருதலை யானுக்கு ஞ துணைக்கிபோனுலவை யுற்ற, சருகெலைச் சுழலைன் யாண்டுந் தரிக்கிலன் மேறுவ சீழுங், குருகிசோத் திடுவனுக்கச் சந்தழு திடுவேன் மன்னே"

என்றபான்மையாய் அம்பட்டன் கலன்று, தனக்குக் கிடைத்த கையடி பொறுக்கமாட்டாமல், சகல உண்மையையுஞ் சொல்லவே, வித்துவான்களையிட்டுக் கோபம் அரசனுக்கு மூண்டதால் அவர்களையெல்லாம் கழுவேற்ற நிர்ணயித்தான். இதைப்பார்த்த வித்துவான்களின் பத்தினிகள்யாவரும் தமுத்தணுன்குச் சித்திர மூக்குமாய் வைத்து, மூன்று முலை யைவிரித்துக் கம்பரை நோக்கி 'ஐயா புலவர் திலக, மங்கிலயப் பிச்சை தரவேண்டும்' என்று கெஞ்சினர்கள். உடனே அரசனைக்கொண்டு அவர்க்கு மன்னிப் பருளினர். பின்பு, கம்பருடைய உண்மைவரலாறு அறிந்து, உடனே அவர் தமக்கு அடைப்பக்காரனுயிருந்ததைப் பற்றி மன்னாய்ப்பு, இதற்கு ஏறத சேவகம் எவ்வாறு செய்யலாமென்று சோழராசன் விசனப்பட்டான் அப்பொழுது கம்பர் தனக்குச் சோழராசனுடைய மேற்படட பணமுடிவிற் ருஞ் செய்தலாகுமத்தக்கதை நிறைவேற்ற அடைப்பவேலை செய்யும்படியாகக் கேட்டுக்கொண்டனர், அரசனும் அதற்குச் சம்மதப்பட்டான். (வரும்)

J. C.

இந்துசாதனம்.

காருண்ணியம்.

கருணை என்னும் பண்புச் சொல்லு, விகுதி கெட்டு ஆதிநீண்டு நன்னெறிபட்டி, யம் வந்து புணரக் காருண்ணியம் என வந்தது. யம்- தோன்றலை, கருணையாய்த் தோன்றலைது என்பது பொருள். கருணை யென்பது எளியவர் மீது வலியவர் கொள்ளும் அன்பு எல்லாசமய சாத்திரங்களும் கருணை கருணை என்று கதறுகின்றன. சைவசமயத் தெய்வத்தின் உருவம் கருணை என்று சொல்லப்படுகின்றது. சிவன் காருணணிய ஸ்வரூபி; கருணையே சொரூபமாய்த் தோன்றுபவர்; துன்பங்கண்டவிடத்து அதனைத் துடைக்க முன்னிற்பவர். திருவிடைமருதூரென்னுந் திருத்தலத்தின்கண்ணே, மருதவிருட்சத்தினடியிலே, சிவபிரான் ஆன்மாக்களின் துன்பத்தை ஓட்டி இன்பத்தை யூட்டவேண்டுமென்னும் பெருங்கருணைச் சிறப்பினாலே, அருளுருக்கொண்டு எழுந்தருளியிருக்கின்றார். அன்ன கடவுளை, தேவர்களும் புகழ்ந்து நிகும் சிவசருமர் என்னும் பெயரினையுடைய ஆதிசைவர் ஒருவர், தவறாது திரிகாலங்களிலும் வணங்கிவந்தார். ஆயினும் இவர் மிகவும் இலம்பாடுடையவர். மனைவியை இழந்தவராகிய இவர், போகங்களை அனுபவித்தே பின் மோக்கத்தினை அடைதல் எண்ணியவராய், விவாகஞ்செய்யவிரும்பி சிவபிரான் திருமுன்னர் நின்று விண்ணப்பஞ் செய்தனர். அப்பொழுது சிவபெருமான் இவருடைய துன்பத்தை யகற்றத் திருவுளங்கொண்டு கண்டவர்களெல்லாம் விரும்பத்தகும் பதினாறு பிராயப் பிராமணச் சிறுவராய், மழு என்னும் ஆயுதத்தை எழுத்தாணியாகவும், வேதபுத்தகத்தின் எட்டைப்பனையோலையாக்கியும் தம்மையோர் கணித சாஸ்திர விற்பன்னர் போன்று காட்டிக்கொண்டு, வெறுஞ்சாதத்துடன் சிவசருமர் வீட்டையடைந்து, அவரை நோக்கி, "ஐயா, இதோ நான் வைத்திருக்கும் வெறுஞ்சாதத்தை உண்பதற்காகத் தயவுசெய்து அறுசுவை பொருந்திய நல்ல கறி தாருங்கள்" என்று கேட்டார். அதனைக்கேட்ட சிவசருமர், தெய்வச சிறுவரின் நாகரீகத் தோற்றத்தைக்கண்டு, அவரை நோக்கி "அருமையினையுடைய சிறுவ, என்னியல்பினை யறியாது உன்னியல்பிற்குத் தக அறுசுவைக்கறி எனக் கேட்கின்றாய்; உன்னுடைய சொல்லினால் அறுசுவைக்கறி மனத்திலுறத்துகின்றதேயன்றி. அறுசுவைக்கறி இன்னதென அறியேனாயிருக்கின்றேன்" என்றார்.

மருதவாணர்:—(இதுதான் தெய்வச்சிறுவரின் பெயர்) "நீங்கள் ஏதோ பேசுகிறீர்கள்; நான் அம்மாளிடம் நல்ல கறி வாங்கப்போகின்றேன்; அவர்கள் எங்கே? சொல்லுங்கள்" என்றார்.

சிவசருமர்:—என்னுடைய நற்குணமுள்ள மனைவி யான்கொடுத்துவைத்தாமையால் என்னை விட்டுத் தெய்வலோகத்துக்குப் போய்விட்டாள்.

மருதவாணர்:—ஏன் பிறிதொருகன்னிகையை மணஞ்செய்துகொள்வதுதானே.

சிவசருமர்:—வறுமை யென்னும் பெண் என்னிடத்திலிருக்கிறபடியால், பிறிதொரு பெண்ணை மணஞ்செய்துகொள்ள முடியாதவனாயிருக்கிறேன். தண்ணிய கங்கை முடியிலிருக்குங் கடவுள் என்னை எண்ணுவாராயின் எல்லாந் தானே யடையும்.

மருதவாணர்:—(சற்றுஞ் சிரியாதவராய் எழுந்து) ஐயா, நான் அன்னை தந்தையில்லாதவன்; எத்தத் தொழிலுங் காலத்திற்கேற்றவாறு செய்யவல்லேன்; என்னைக் கொண்டுபோய் விற்று வறுமையினின்றும் நீங்கிக்கொள்ளுங்கள்.

சிவசருமர் இதனைக் கேட்டதே பிரமித்துக் கலவரமடைந்தவராய்ச் சிறிது நேரம் ஒன்றும் பேசாதிருந்து பின்பு சிறுவரைப் பார்த்து "விற்றப் பிறகு? ஓ எனக்கு இகழ்வரும்; இதுவேண்டாம்" என்றனர்.

மருதவாணர்:—உமக்கு இகழ் வாராதவண்ணங் காக்கவேண்டியது என்னுடைய கடமை. யாரும் பழுதுரைத்தால் அடிமைச் சீட்டிருக்கிறதென்றால் எல்லாஞ் சரியாய்விடுந்தானே.

சிவசருமர்:—இது நீதியல்ல. எவரிதனைக் கேட்டாலும் எனக்குத் தீங்குசெய்வார்கள்; சீ என்பார்கள்; பரிகாசஞ்செய்வார்கள். ஆனபடியால் இதுவேண்டாம்.

மருதவாணர்:—இதற்கா இவ்வளவு அச்சம். வஞ்சகத்துக்கா சொல்லுகிறேன். மனிதனாயிருந்தால் அவன் இரக்கமுள்ளவனாயிருக்கவேண்டும். நான் சொல்லியபடி செய்தால் உமக்குப்பொருள் வரும். எனக்குப் புண்ணியம் வரும். இந்தத்தோற்றத்தின் கடமையைச்செய்ததாகும். நான் இதைச் செய்யவேண்டுமென்று பிடிவாதஞ் செய்ய நீங்கள் இதைமறுப்பது நல்லதல்ல. உமது மூலமாக உமக்கும் நன்மை செய்து ஒருவரை நான் அடையவேண்டும். ஆனபடியால் இதை மறுது நான் குறிக்கும் ஆளுக்கு என்னை விற்றுவிடுங்கள்.

சிவசருமரும் பெருமானின் விருப்பத்திற்கு இசைந்தனர். பின்பு மருதவாணர் ஒரு குழ்ச்சி செய்து பழைய அடிமைச் சீட்டொன்றைச் சிருட்டித்துச் சிவசருமரிடம் கொடுத்தனர். சிவசருமர் அதனைப்பெற்று, அச்சிறுவர் தானுமாகத் திருவிடைமருதீசரை வணங்கி, அநேக காதவழிகளப்பாலுள்ள காவிரிப்பூம் பட்டினத்தை (ஐயனடியினைகள் சிவக்கும்படியாக) நடந்து வந்தடைந்து, திருவெண்காட்டடிகளென்னும் பட்டினத்துப் பிள்ளைக்குவிற்றுத் தாம் திரும்பிப் போகவளாயுள்ளனவெல்லாம் பலவாயனுபவிக்க, தெய்வச் சிறுவராகிய மருதவாணர் திருவெண்காட்டடிகளிடம் வேலை செய்து பின்னர் அன்னார்க்கும் அருள் செய்தனர். இப்படியே பெருமான் துன்பங் கண்டவிடத்து அதனைத் துடைக்க முன்னிற்பர். வெள்ளியம்பலமாகிய மதுரையில், ஓர் கரைமூதாட்டி கூலியாளொருவரின்றிக் கவன்றழி, சோமசுந்தரக்கடவுள் ஒரு கூலியாளாகக் கருணுருபங்கொண்டு, அவ்வம்மையாரிடம் கூலியாளாகி, கூலியாகப் பிட்டும் வாங்கி அருந்தி மண்சுமந்து வைகைக் கரையில் கொட்டினர் பாண்டியத்திரர்பொருட்டு பிரம்படி சுமந்தனர். இப்படி நாளும் எண்ணிறந்த கருணுருபங்கொள்வர், கருணை யென்பது ஒரு சிறிதுமின்றிய மாக்கள் சிலர், ஆட்டுக்குட்டிகளைக் கொழுப்பேறட்டும் என்று கருதி, வாள் கனையால், அதனிடத்தைத் தீர்க்கவிடாது தடுப்பர். அந்தோ, இவர்களுக்கு என்ன நரகமோ யாமறியேம். சகோ தரர்களே! ஒரு புறவைக் காப்பாற்றவேண்டித் தன் சரீரம் முழுவதையும் அறுத்துத் துலையிலிட்ட சிபிச்சக்கிரவர்த்தியால் காப்பாற்றப்பட்ட சந்ததியாராகிய உங்களில் கருணையானது மறைகின்றதே.

கருணையைக்கைவிட்டீர்களோ நீங்களும்கெடுவதில்லை, வேனிற்காலம் வரப்போகின்றது. மேகவண்ணராகிய ஸ்ரீ விஷ்ணு மூர்த்தியின் திரும் அமைந்த கோவிலைப் புல்லெல்லாங் காட்டில் ருந்து நாட்டுக்கு வந்துவிடும் கோபால கிருஷ்ணனின் வேய்ங்குழலோசையோ வென்று மயங்கத் தகுந்த இசையினையுடைய அப்பட்சிகளைச் சுட்டுக் கொன்றுவிடாதீர்கள் அமரிக்கன் சிவில் சண்டையில், ஒரு கமசகாரன் வீடடுக்கு முன் னுச சண்டைசகுக் கட்டளை கொடுக்கப்பட்டபொழுது. மரத்தி லபாயத்திலிருந்த பூனைக்குட்டியைக் காப்பாற்றவேண்டி, அந்த யுத்தத்தினிடையில் தன்னுயிரைப் பொருட்படுத்தாது அதனைக் காப்பாற்றிய அந்த வீட்டுப் பெண்மணியைப் பின்பற்றுங்கள். ஒரு கொடியைத்தானுங் கிள்ளிவிடாதீர்கள். அது தளர்ந்ததாயின் அதற்கு ஒரு கொம்பு நட்டு நீருமூற்றிவிடுங்கள், பாரியென்னும் வள்ளல், ஓர் தினம் உத்தமப் புரவி பூண்ட சித்திரத் தேரிலேறிச் செல்லும்பொழுது முல்லைக்கொடி யொன்று தான் படர்தற்கேற்ற கொழு கொம்பின்மையின் தளர்தலைக் கண்டு ஆர்ருளுய், அத்தேரைத் தானே றதற்கு ஏற்பச் சமைத்த அணியோடும் அம்முல்லைக் கொடிக்கு வழங்கிய பெருகருணைத் திறத்தைப் படியுங்கள். எவனொருவன் காருணணிய மிகுதியை யுடையவனா யிருக்கிறானோ அவனையே தெய்வமென்று உலகு தொழும்.

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா வுயிருந் தொழும்"

ஆதலாலது எவனொருவன் ஜீவகாருண்ணிய மிகுதியை யுடையவனாயிருக்கிறானோ, அவனை ஓரறிவுயிர்முதல் ஆறறிவீறாகவுள்ள எல்லா உயிர்களும், இவனே எங்கள் கடவுளென்று வணங்குமென்று உத்தரவேதமாகிய திருக்குறளிற் கூறப்பட்டிருக்கிறது. மறத்தின்கண்ணும் அறம்வேண்டுமென்று நீதிசாத்திரங்களிற் கூறப்பட்டிருக்கின்றது. பாரதயுத்தத்திற் பாண்டவர் பக்கத்திற்சேர்ந்து கௌரவர்களோடு மாறு கொண்டு யுத்தஞ் செய்தவனாகிய சோமஹாராஜன் இருபுறப் படைகளும் பசியால்வருந்தாவண்ணம் கருணையுடையவனாய் அவ்விருதிறப் படைகளுக்கும் பலவேபோன்ற உணவை வரையாது வழங்கினன் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

அன்பினையுடையவர்களே,

இசஞ் செய்கையைவிட்டு அதஞ்செய்யாதீர்கள். வியாசபகவான் சொல்லுவர், தமது கால்களால் நடக்கும்பொழுது, முகத்திலுள்ள கண்ணுக்குத் தெரியாமல் அற்பபூச்சிகள் இறந்தாலும் என்று பரிந்து கால்களிலுங் கண்கள் பெற்றனர். நிற்கும்பொழுதும் நடக்கும்பொழுதும் இருக்கும் பொழுதும எக்கே நம்மால் தீங்கு நேரிடுமோ வென்று சாக்கிரதையாயிருங்கள்.

இதுகாறுங் கூறியவற்றால் கருணை இன்னதென்பதும், சிவபிரானின் உருவம் கருணையே என்பதும, அவர் துன்பங்கண்டவிடத்துத் துடைக்க முன்வருவரென்பதும், கருணையில்வழி உய்தல் கூடாதெனபதும், ஒன்றைபுங் கோறலாகாதென்பதும், எல்லாப் பிராணிகளிடத்துங் கருணையோ டிருக்கவேண்டு மென்பதும், புல்பூண்டின் தளர்ச்சியைக் கண்டாலுந் தளரவேண்டுமென்பதும், காருண்ணிய மிகுதியே கடவுட்டன்மை யென்பதும, பகைவரிலுங் கண்ணோட்டஞ்செல்லவேண்டு மென்பதும், கருணை மிகுதியோடிருக்க முயலவேண்டுமென்பதும ஒருவாறு பெறப்பட்டன.

புலோலி, பொ. நடராஜன்.

விளம்பரம்

பட்டுக் குட்டை.

அசல் பட்டு! முழுமையும் பட்டு!! எல்லாம் பட்டு!!

5½ முழ நீளமும் 2¼ முள அகலமுமுள்ள குட்டை 1-க்கு, விலை ரூபா 2—8—0
வி. பி சார்ஜ் அணா 4



இந்தப் பட்டுக் குட்டைகள் மிகவும் நேர்த்தியாகவும் நாணயமாகவும் பளபள வென்று பிரகாசிக்கும். இவை சிரசில சுற்றிக்கொள்ளவும், தேகத்தின்மேல் போட்டுக்கொள்ளவும், அனுகூலமாக இருக்கும். பெண்களுக்கு மேல்தாவணிகளாகவு முபயோகிக்கலாம்.

விலாசம்:—
கனக அண்டு கம்பெனி,
பார்க்டவுன் போஸ்டு, மதராஸ்.

இதைக் கவனியுங்கள்.

உலகமெங்குங்கியாதிபெற்றுக்கையாண்டுவரும் மருந்துகளின் விபரம்.

1. கேர்ப்ப உற்பத்தி மூலிகை உப்பு.

இது கெர்ப்பஸ்தானத்தில் சதை வளர்தல், பாசி படர்தல், காலாகாலங்களில் மாதவிடாயாகாமற் சரீரம் பருத்தும் இளைத்தும் இருத்தல், பொறக்க முடியாத வயிற்றுவலி முதலிய காரணங்களால் கெர்ப்ப உற்பத்தி இல்லாதிருப்போர்க்கு அந்நோய்களை மாற்றிக் கெர்ப்பந் தரிக்கச்செய்யுமென்பது திண்ணம்.

௧௧ நாள் மருந்தின் கிரயம் ரூபா ௧.

2. தாதுவிர்த்திக்குப் பஞ்சாமிர்த லேகியம்.

இந்த அமிர்தம்போன்ற லேகியத்தைப் பாவித்ததன்பின்பே இதன் குணம் வெளியாகும்.

௨௨ நாள் மருந்தின் கிரயம் ௹ ௨, அணா ௮,

3. பிரமேக வியாதிக்குச் சத்துச் செந்தூரம்.

எவ்வித பிரமேகமும் இம்மருந்தை யருந்தினால் சூரியனைக் கண்ட பனிபோல நீங்கிவிடும்.

௧௧ நாள் மருந்தின் கிரயம் ரூபா ௨.

4. எவ்வித வாய்வுகளுக்குஞ் சண்டமாருதக் குளிகை.

சரீரத்தின் எந்தஇடத்திலும நடிக்குந்தும்வாய்வுகளுக்கும் மற்றையவ்விதவாய்வுகளுக்கும் இம்மருந்தேகாண்டீபம். ஜந்துக்கிருத்திர குணமாகும்.

௪௦ மாத்திரை புட்டி ஒன்று ௹ ௧, அணா ௮.

5. மேகசஞ்சீவிச் சூரணம்.

மேகநோயுண்டாகியபின் காணப்படும் அரையாப்பு முதலிய சர்வரோகங்களையும் இம்மருந்து நீக்கிவிடும். ௨௨ நாள் மருந்து ௹ ௨.

6. புளிப்பு மாதுளம்பழ லேகியம்.

அன்னத்துவேஷம், பித்தக்கிறுகிறுப்பு, ஜீரணக்குறைவு, மலக்கட்டு இவைகளுக்குக் கைகண்ட ஔடதம்.

௧௧ நாள் மருந்தின் கிரயம் ௹ ௧, அணா ௮.

7. இளைப்புஇருமலுக்குச் சுவாசகாசச்சூரணம்

எவ்வித இளைப்பு இருமல்களையும் அகற்றும்.

௨௨ நாள் மருந்து ௹ ௨.

8. மூலிகை ரத்தினத் தைலம்.

அபூர்வ மூலிகைகளாற் தயாரித்த சுகந்த பரிமளமுள்ளது. குணத்திற் சிறந்தது. மணத்தில் மிகுந்தது. ஒருமுறை அரைக்கால் ரூபாயிடை தைலத்தைத் தலைக்கிட்டுக்கொண்டால் அன்று முழுவதும் ஜிலுஜிலுப்புடனிருப்பதுமன்றி ஒரு வாரம் வரை பரிமளம் மாறாது. 8 அவுன்ஸ் டின் 1-க்கு ௹ 1.

9. பரிமள பற்பொடி.

பல் கூச்சம், ~~இரத்தம் வருதல்~~ துர்நாற்றம் இவைகளை மாற்றிப் பல் கறக்காமல் முத்துப்போலிருந்து நறுமணங்கமழச்செய்து பல்வலியையும் 2 நிமிஷத்தில் கேட்கும்.

டப்பி 1 க்கு ௹ 0-4-0 டஜன் 1 க்கு ௹ 2-12-0.

10. படர்மேக சங்காரி வெண்ணெய்.

மேகநோயால் தேகத்தில்விழும் எவ்வித பத்துப் படைகளையும் ௩ வேளையிற் குணமாக்கும்.

டப்பி ௧-க்கு அணா ௪. டஜன் ௧-க்கு ௹ ௨, அ. ௮.

எவ்வித மருந்துகளும் உபயோகிக்கும் விபரம் மருந்துடன் வரும்.

தவறாதீர்கள்! இதுசமையம்!! தவறாதீர்கள்!!!

உங்களுங்கள் அதிஷ்டத்தைப் பரீக்ஷித்துப்பாருங்கள்.

(க) ஜாதகத்தை அனுப்புங்கள். இல்லாவிடில் ஜனனவருஷம் மாசம் தேதி நாழிகை என்னும் இவைகளை அனுப்புங்கள். இல்லாவிடில் இது பார்த்தவுடன் இதனடியிற் குறித்துள்ளவைகளில் எந்தப்பாகம் வேண்டுமோ அந்தப்பாகம் வரைந்தனுப்பினால் இன்னின்ன காலத்தில் இன்ன வயதுக்குள் இன்னவை கிட்டும் கிட்டாதெனவும் கடிதம் கிடைத்த நேரத்தைக் கொண்டு இன்ன விதமுடிவுபெறுமென்று சண்முகநாதன் திருவருளால் வரைந்தனுப்புவோம்.

(உ) ௧. ஆயுட்பாகம், ௨. எந்தவிதத்தினால் தனங்கிடைக்கும், ௩. கல்யாணம் சொந்தமா, ௪. களத்திரபாகம் எந்தவூர், ௫. அது முனனு பின்னு, ௬. புத்திரனுண்டா, ௭. தனம் வைத்துப் போவேனு, ௮. மரணமாகுமிடம் சுயதேசமா, ௯. சொந்தவீடு நிலம் கிட்டுமா, ௧௦. கடன் எப்போது நிவிர்த்தியாகும், ௧௧. விவகாரம ஜெயமாகுமா, ௧௨. எண்ணத்தகாரியம முடியுமா.

தனி ஒருபாகம் சார்ஜ் ௹ ௧.
முழுத்தொகையும் அனுப்பவேண்டும்.
௧௨ பாகம் சார்ஜ் ௹ ௫.

பாதிச்சார்ஜ் முற்பணமாக அனுப்புவோர்க்கு வி. பி. போஸ்டில் அனுப்புவோம்.

விபரந்தெரியவிரும்புவோர்விலாசம எழுதினாற் ஜோதிஷ, வைத்திய "கேட்லாக்" இனாமக அனுப்புவோம்.

வீ. பீ. சார்ஜ் பிரத்தியேகம்.

K. V. கோவிந்தசாமிநாயுடு,
ஜோதிஷம்,வைத்தியம்,
மேலைச் சித்திரவீதி,
மதுரை.

☞ இவைகளுக்கு எழுதுவோர் இப்பத்திரிகையைக் குறிப்பிட்டுக் காட்டவும்.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க, நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

விளம்பரம்.

சுதேச வைத்திய ரத்தினம்.

:*:*:*:

முன்பதிப்புகளைக்காட்டிலும் விரிவானது.

மூன்றாவதுபதிப்பு சித்திரப்படங்களுடன் கூடியது.

இப்புத்தகத்தில் தினந்தோறும் நமது காலடியில் மிதிபடும், புல், செடி, கொடி, காய், கனி பட்டை, கட்டை, வேர், இலை, பூ, பிசின், வித்து முதலியவைகளைக்கொண்டும், நமது நாட்டுக் கடைகளில் சாதாரணமாய்க் கிடைக்கக்கூடிய கடைச்சரக்குகளைக்கொண்டும் வைத்தியர் உதவியின்றி தீவரவர்களே, சூரணமாகவும், பஸ்மமாகவும், செந்தூரமாகவும், மாத்திரையாகவும், கஷாயமாகவும் வடகமாகவும, மெழுகாகவும, லேகியமாகவும், திராவகமாகவும் களிம்பாகவும், பிளாஸ்திரியாகவும, இந்திய ஆயுர்வேத முறைப்படியும், இங்கிலிஷ் வைத்திய முறைப்படியும் செய்து, சாதாரண வியாதிமுதல் பெரியவியாதியும் நாட்பட்டதுமானவைகளுக்கும், உபயோகிக்க வேண்டிய விதத்தையும், அளவையும், ஒவ்வொரு பதார்த்தங்களுக்கும் தமிழ் இங்கிலிஷ் லத்தீன் முதலிய பாஷைகளிலுள்ள பல பெயர்களுடனும் விபரமாய் வரையப்பட்டிருக்கிறது. இன்னும் இப்புத்தகத்தில் "வியாதிகளை இலகுவாய்த் தெரிந்துகொள்ள ரோக அட்டவணையும்" ஒவ்வொரு வியாதிகளுக்கும் தமிழ் இங்கிலிஷ் பெயர்களுடனும், ஒவ்வொரு வியாதிகளுக்கும் உபயோகிக்கவேண்டிய ஔஷதங்களையும் எழுதப்பட்டிருக்கிறது. சுருங்கச் சொல்லில் தேக ஆரோக்கியத்தையும், நோயில்லா வாழ்வையும், சுகசெல்வ நன்மைகளையும் அளிக்கக்கூடிய புத்தகம் இதுவேயன்றி வேறில்லை. கிரௌன் எட்டுப்பக்க அளவில் சுஎ0 பக்கங்களுள்ளது. ஸ்டிப் பைண்டு விலை ரூபா ௨-௮-0. கலிகோ பைண்டு ரூபா ௩. தபால் சார்ஜ் அணா ௪. பெதர் வெயிட் என்னும் விலையுயர்ந்த பேப்பர் பதிப்பு கலிக்கோ பைண்டு ரூபா ௩-௮-0. தபால் சார்ஜ் அணா ௫ சிங்கப்பூர் முதலிய அன்னிய நாடுகளுக்குத் தபாற்செலவு அணா ௮.

"நமது சிறிய சத்துருக்கள்" அல்லது பிளேக், காலரா, மலேரியா முதலிய கொள்ளை நோய்களின் உற்பத்தி விபரமும் அவற்றிற்கான பரிகாரங்களும் தபாற்செலவுடன் அணா ௮ ஸ்டாம்புகளும் கிலைமங்களும் விலை அணா ௪.

விலாசம்:—டாக்டர். எஸ். சந்திரசேகரர், கும்பகோணம்.

நாகரீக புதுச் ஜவுளிக் கம்பெனி.

:**:

விலை சகாயம்! திணுசு நயம்!!

நமது புதுச்ஜவுளிக் கம்பெனியில் தற்காலநாகரீகத்துக்கேற்ற காசி பெனரீஸ பலகலர்ச் சேலைகளும், தாவணிகளும், துப்பட்டாக்களும், சவுக்கங்களும், ரவுக்கைகளும், கல்கத்தா நார்பட்டு வெண்பட்டுச சேலை சால்வைத் திணுசுகளும், கொர்நாடு, கும்பகோணம், தஞ்சாவூர், ஆரணி, காஞ்சிபுரம் இன்னும் அநேக ஊர்களில் நெசவுசெய்யப்படுகிற பலகலர்ப்பட்டுச்சேலைகளும், தாவணிகளும், சிற்றுடைகளும், ரவுக்கைகளும், மதுரை, கோயம்புத்தூர், தயிலி, உப்பாடை, நெல்லூர், 100, 150, 200-ம் நம்பர் நூல்களில் ஜரிகை, கிருதிக்கரை, பின்னல், பனார்ஸ்பேட்டு, ரோஜாக்கொடி, மயில்கொடி, சந்திரஹாரக்கொடி இன்னும் புதுமாதிரிக்கொடி, செடிகள் வைத்த ஜரிகைப் பலநிறச் சேலைகளும், தாவணிகளும், டிசைன்கள் நாலில் மேற்சொன்ன பலதிணுசுக்கரைகள்வைத்த கிருதிக்கரை, ஜரிகை முளச் சால்வைகளும், சவுக்கங்களும, 7, 8 முழப் பலதிணுசுச்ஜோடிகளும், தலைக்குட்டைகளும், உறுமால்களும், பட்டணம் பலகலர் சாதாக்கரை, ருத்திராக்ஷக்கரை, மாங்காய் பேட்டுகள் வைத்த சேலைகளும், இன்னும அநேகமாதிரிப் புதுத் திணுசுகளும் ஏராளமாய் உண்டு.

ஒருமுறை நமது கம்பெனிக்கு ஆடர்செய்து திணுசுகள் தருவித்துப்பார்த்தால் திணுசுகளின் நயமும் விலையின் சாசமும் தெரியவரும்.

குறிப்பு:—எல்லாவிபரமுமடங்கிய ஜவுளி கேட்லாக் (Catalogue) வேண்டுவோர்க்கு இனாமாக அனுப்புவோம்.

டி. என் அழகாசாமிபாகவதர் & சன்ஸ்,
நாகரீக ஜவுளிவியாபாரிகள், கமிஷன் ஏஜண்டுகள்,
கீழ்மார்க்கட்டுவீதி, மதுரை, (தென்இந்தியா.)

☞ Printed and published by S. [illegible]Pillai, for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna.